தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 15—12—56 | சனிக்கிழமை | இதழ் 16



★

அம்பேத்கார்

"ஒருவனுல் கோடி மக்கள்
உயர்ந்தனர்" என்ருல் அந்த
ஒருவனே நீதான்; உன்னுல்
உயர்ந்தவர் தாழ்த்தப்
பட்டோர்!
"செறுமினுல் குற்றம்; எம்மைத்
தீண்டினுல் குற்றம்" என்றே
குறுமதி வீணர் சொன்ன
குலத்திடை விளக்கம் தந்தாய்!

"என்புதோல் யார்க்கும் ஒன்று!
எப்படி இவர்கள் மேலோர்!
அன்பரீர்! எழுவீர்" என்ருய்;
ஆர்த்தது இந்துப் பாம்பு!
மின்படு கணத்தில் அந்த
விரியனைக் கொன்ருய்! சாதி
என்செயும் என்ப தேபோல்
எடுத்தனை "மேலோர்"
பெண்ணை!

தூக்கமே சாக்கா டாகத்
தூயநீ சென்ருய்! அந்த
ஏக்கமே நோக்கா டாக
இளைத்தனர் தாழ்த்தப்
பட்டோர்!
ஆக்கமே பெறுவோம்! சார்ந்த
அறிவறு சாதிப் பாம்பை(த்)
தாக்குவோம் நின்பாற் பெற்ற
தடியுண்டு! கைக ளுண்டு!

—கண்ணதாசன்

★

★ ரோட்டோரம் வீட்டுக்காரி; ரோசாப்பூச் சேலைக்காரி ★

காத்தோரங் கொண்டைக்காரி; கையலைப்பில் கெட்டிக்காரி

காணாக்கரிசல்; அதிலே கட்டி உழவு 'கருக்கா' நடக்கிறது. இரண்டு ஏர்கள் உழுகின்றன. அதை ஒத்தைக் கலப்பை போட்டு, ஒரு முழச்சாலு விட்டுக் குட்டைக் காளை மாட்டிக் 'குதிரை' ஏறிப் பத்துகிறார்கள். 'கடலப்பயறுபோல வெடலப்பயல்' ஒருவன் முன்னேரைப் பிடிக்கிறான். "தாத்தா மாதிரி தள்ளு கிழவன்' ஒருவன் பின்னேரைப் பிடிக்கிறான். இதிலே, முன்னேரு பிடிப்பவன் அந்த நிலத்துக்கு 'முதலாளி'; அந்த இரண்டு ஜோடிக் காளைகளும் இவனுக்குத் தான் சொந்தம். அதாவது அவன் 'ஈரேருச் சம்சாரி.'

அந்த நிலம் வழிப்போக்கு நிலம்; அதாவது 'ஒத்தடிப் பாதை' ஒன்று, அந்த நிலத்தின் ஊடே ஓடுகிறது. அந்த ஒத்தடிப் பாதையிலே ஒருத்தி வந்தாள்; வந்தவளோ வயசுப் பெண். அவளோ, கண்டங்கறுத்த பிள்ளை; காலுருட்டுப் போட்ட பிள்ளை; 'இருட்டுக்கு' ஏத்த பிள்ளை; எட்டுப்போட்டு நடந்து வாராள், அவள் தலையிலே கூடை ஒன்றைச் சுமந்துவருகிறாள். வருகிறவள், தப்பித்தவறி எப்படியோ பக்கத்தில் உழும் தன் காதலனைக் கண்டுவிட்டாள். ஆமாம்...முன்னேரு பிடிக்கும் 'முறுக்கு மீசைக்காரன்' தான் அவள் காதலன். 'சரி சரி'...அந்த நிலத்து முதலாளியையே', வளைச்சுப் போட்டிருக்கிறாள்.' 'ஆனா ஒண்ணு', பிடிச்சாலும் பிடிச்சா நல்ல புளியங்கொப்பைப் பார்த்து!

பாதை வழியே 'படபட'வென நடந்துவந்தவள், 'அவனைக் கண்டதும் நடையை நிறுத்திவிட்டாள். நின்ற இடத்திலேயே நின்றாள்; 'அவனை'யே பார்த்தாள். அவனோ, முன்னேரை மும்முரமாகப் பிடிக்கிறான். வேலையில் முழுக் கவனத்தைச் செலுத்திவிட்டான். 'தை-தை'-என மாட்டைப் பத்துகிறான்; தார்க்குச்சியால் குத்துகிறான்; வாலைப் பிடித்து முறுக்குகிறான். இது தவிர, 'அக்கம் பக்கம்'அவன் திரும்பவில்லை. அதனால்தான் அந்தப் பாதையிலே நிற்கும் என் காதலியைக்கூடக் கவனிக்கவில்லை, ஆனால், அவளுக்கோ, இவனுடன் பேசாது போக மனசில்லை. எனவே பாதையிலே 'நிண்ணு நிண்ணு' பார்த்தாள்; 'ஒண்ணும்' பலனில்லை. 'இனி வாய் திறந்து சப்தமிட்டாவது 'தன் வரவை'த் தெரிவிப்போம்—என முடிவு செய்தாள். எனவே, அந்தப் பட்டிக்காட்டுக் 'கட்டி வெல்லம்' இதைப் பாடுகிறாள்:

"முன்னேரு பின்னேரு
இரண்டுந் தனதேரு
முன்னேரு பிடிப்பவரு
முறைக்கு மச்சானும்.
கட்டி உழவுக்குள்ளே
கருத்தாளு நல்லஆளு
இங்கவழி போரயென்னை
ஏறிட்டுப் பார்த்தா
லென்ன?
கண்ணேண்ணு ஒரு
வார்த்தை
கனிந்து அவரழைத்தால்
பெண்பிள்ளை நானும்
பேச மறுப்பேனா?"

பேசாது வழிநடக்க அந்தப் பெண்மயிலுக்கு மனசில்லை; எனவே பேச அழைக்கிறாள் தன் காதலனை. பேதைப் பெண்! ஆனாலும் அவனைப் பேச அழைக்கும் உரிமை அவளுக்கிருக்கிறதே! மதிப்புக்குரிய அவள் மச்சானல்லவா? அதனால்தான் அவ்வளவு உரிமையுடன் கூப்பிடுகிறாள்; கையலைத்துத் தன்னருகே வரச்'சாடை' காட்டுகிறாள்!

சைகை காட்டித் தன்னருகே அழைத்து விட்டாள். அவனால் 'இந்த அழைப்பை' ஏற்றுக்கொள்ள முடியுமா? அவளருகிலே வரமுடியுமா?...வந்தாலோ உழவு தடைப்படும். மேலும் 'சித்திரை மாதத்து உழவு பத்தரை மாத்துத் தங்கமாச்சே"—இப்படி இருக்கையிலே எப்படி 'அவகிட்டே' வரமுடியும்? எனவே...வரவில்லை!... "ஆட்டையும் மேய்க்க வேண்டும்; அண்ணனுக்கும் பொண்ணு கேக்கவேண்டும்"—என்பது போல, சோலி, சோலி வாக்கு; பேச்சு, பேச்சு வாக்கு." அதாவது வேலை ஒரு பக்கம்; பேச்சு ஒரு பக்கம். இந்த முறைப்படி பேசுகிறான், முன்னேரைப் பிடித்தபடியே:

"ஒட்டரம் பூவே! நீயே!
ஓசக்கிருக்கும் தாளம்
பூவே!
கண்ணுவலிப் பூவே! நீயே!
கண்டு பேசி நாளாச்சே"

"இரண்டு மூணு நாளாய் உன்னைக் காணவில்லையே! கண்டு பேசவில்லையே!! காலத்தை வீணாக்கினேனே"—எனக் கவலை தெரிவிக்கிறான் போலும்.

இந்த வார்த்தைகள் 'அவளை'ச் சாந்தி செய்யவில்லை. "இவனுக்கென்ன இவ்வளவு திமிரா? நானோ பாதையிலே நிற்கிறேன்; அவனோ, அவன் பாட்டுக்கு உழுதுகொண்டிருக்கிறானே! என்னைவிட இவனுக்கு உழவுதான் உசத்தியோ?...மாட்டை அவிழ்த்துவிட்டு, வீட்டுக்கு என்கூட வந்தாலென்ன?... மணிக்கணக்குப் போட்டுக் காட்டியாவது மாட்டை அவிழ்த்துவிடச் சொல்லுவோம்"—என மனசிலே எண்ணி, இதைச் சொல்லுகிறாள்:

"மச்சமுள்ள மச்சானே!
மத்தியான நேரமாச்சு
உச்சிப் பொழுதாச்சு
உனக்குத் தெரியாதா?"

ஏரை அவிழ்த்துவிடேன்; என்னுடனே வாயேன்; வழிநெடுக நடந்திடலாம்; வகையுடனே பேசிடலாம். இப்படிக் 'கன்னி'யவள் 'பன்னிப் பன்னி'ப் பேசுகிறாள்.

"நொண்டிக் குதிரைக்குச் சறுக்கென்றதுதான் சாக்கு." அதுபோல், 'மத்தியான நேரமாச்சே'-என மங்கையவள் சொன்னதுமே, மாட்டை அவிழ்த்து விட்டான்; கோட்டை ஏர்ப் போட்டான். மாட்டைப் பத்திப் பாதையிலே விட்டுவிட்டு, அவள் பக்கத்திலே வந்தான். வந்தவன், அவளைக் 'கீழும் மேலும்' பார்த்தான்; 'ஏழும் எட்டு'மாகப் பல்லைக் காட்டினான்; அவள் தோளின் மேலும் பையக் கையைப் போட்டான். அவளோ, துள்ளிக் குதித்துத் தள்ளி நின்றாள். "சரி—சரி... நட."—என்றான். 'அவள் முன்னாலேயே போக, 'இவன்' பின்னாலேயே வந்தான்.

பாதையிலே அரை ஏக்கர் வரைக்கும் அமைதி நிலவியது. ஆகவே மௌனத்தைக் கலைத்தாள். "சாலையிலே கூடவரும் சந்திரரே! என் மச்சான்! சமயமும் கடக்கிறது; 'சலசலண்ணு' ஏதேனும் சரமாரி பொழி மச்சான்"—எனப் பொன்னுக்குப் பொட்டிட்டாள் அந்தப் 'பெண்மயில்'. உடனே அவன்,

"ரோட்டோரம் வீட்டுக்காரி
ரோசாப்பூச் சேலைக்காரி
காத்தோரங் கொண்டைக்
காரி
கையலைப்பில் கெட்டிக்
காரி"

இதைப் பாடிவிட்டு, ஆந்தை போலப் 'பேந்தப் பேந்த' விழித்தான். 'அங்கிட்டும் இங்கிட்டும்' பார்த்தான்; கண்ணுக்கெட்டுந் தொலைவிலே, 'எங்கிட்டும்' யாரையுமே காணோம். எனவே இதைப் பாடுகிறான்:

"சதுர்வளைவி தோள்வளைவி
தொட்டுப் போர
பெண்ணே!
சாலையிலே சிறுபொழுது
தங்கிப் போவோம்
கண்ணே"

இதைக் கேட்டதும், அவள் 'வெல வெலத்து'ப் போனாள். இந்தப் 'போடு', போடுவாண்ணு, எந்தப் போதும் அவள் எண்ணவில்லை. ஆனாலும், 'மௌனமாய் இருந்தால் ஆபத்து" — எனத் தெரிந்து இதைப் பாடுகிறாள்:

"தங்கினாலும் தங்கவிடான்
எங்கப்பன் கண்ணே!
எங்கப்பன் கண்டாலும்
என்ன சொல்வோம்
கண்ணே!"

என்று தன் அப்பன் 'மேல் பாரத்தை'த் தூக்கிப் போட்டாள். "ஆனாலும், இவனைச் சும்மா விட்டாலோ 'சுட்டித்தனம்' செய்வான்; ஊர் போய்ச் சேருவதற்குள் ஒரு கை பார்க்காது விடமாட்டான்"—என எண்ணி "குறுக்கு வலிக்குது மச்சான்; கூடையைக் கொஞ்சம் மாற்றிக்கோ"—என்று சொல்லி, தன் தலையிலிருந்த கூடையைத் தூக்கி, அந்தக் 'குறும்புக் காளை'யின் தலையில் ஏத்திவிட்டாள். "இந்தத் தண்டனை உனக்கு வேண்டும்; இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்; பின்னே நிலையறிந்து பேசவேண்டாமா நீ?"—எனச் சட்டெனக் கேட்டாள், அந்தக் 'கட்டுடல்காரி.' வேனாக் கொதிக்கின்ற வெயில்; அவன் விரும்பாத அவளின் 'பதில்'; வேலை செய்த அலுப்பு; மத்தியானக் கஞ்சிப்பசி; இவ்வளவு துன்பமும் இவனுக்குப் போதாதென்று, தலையிலே பாரத்தை ஏத்திவிட்டாள். பாவம்! பரிதாபப்படவேண்டியதுதான், அவன் நிலை கண்டு.

ஆயிரந்தானிருந்தாலும், அவன் வாலிபன்தானே? ஆகவே 'துடுக்கும் மிடுக்கும்' இல்லாமலா போயிடும்? எனவே தொடருகிறான்: "அன்ன நடை நடக்கிறாய்; அச்சுமட்டம் போலிருக்கிறாய்; அழைத்தாலோ மாட்டேனென்கிறாய்! செல்ல நடை நடக்கிறாய்; வெல்ல மொழி பேசுகிறாய்; விரும்பி அழைத்தாலோ வேண்டாமென வெறுக்கிறாய்! பேரீச்சம் பழமே! பெரிய இடத்துக் கிரீடமே! பேச்சைத் தட்டுவதேன்? பிழை என எண்ணுவதேன்? சீனிப் பலாச்சுளையே! செங்கரும்பின் தீஞ்சாறே! கேட்டேனடி ஒரு வருஷம்; கெஞ்சினேனே அஞ்சு மாசம்; மாட்டேனென மறுக்கிறாயே! மனசும் உனக்கிருக்கா? மயிலே சொல்லிவிடு"—என மறுபடியும் கேட்டுவிட்டான்.

"வார்த்தையாலேயே என்னைப் 'பேத்து மாத்து' பண்ண வருகிறாயே! தாலி கட்டாமலேயே 'தட்டுப் பெரட்டு'ச் செய்ய வருகிறாயே!...எந்த 'ஜெகஜாலமும்' என் முன்னால் செல்லாது. அதாவது, நீ வீசுகின்ற வலையிலே என்னை 'விழுத்தாட்ட' முடியாது; ஆனால், நீ கட்டுகின்ற தாலியால் என்னைத் தொட்டு அனுபவிக்க முடியும். இன்னுமாவது இதைத் தெரிஞ்சுக்கோ மச்சான்"—இதையெல்லாம் சொல்ல நினைத்தாள்; ஆனால் சொல்லவில்லை. சொல்லியது இதுதான்: "கரியே! கரியழகே! கரிச்சட்டித் தூரழகே! ஊரறிய உலகறிய ஒரு தாலி கட்டிவிடு; உனக்கென்றே நானிருக்கேன்; மினுக்கென்றே தாலி போடேன்."

ஏமாற்றுக்காரர்கள் நிறைந்த உலகம் இது. அது தெரியும் அவளுக்கு; தெரிந்தே இதைக் கூறுகிறாள், அந்தத் தெவிட்டாத தேனமுது. "பரிசம் போடு; பாக்கு வெத்திலை மாத்து; தாளம் முழங்கட்டும்; தாலியும் கட்டிவிடு; தட்டுவேனா பிறகு நான்"—இப்படியாக, இன்னும் தொடருகிறாள் அந்த மின்னலிடையாள்:

"தண்ணிக்கு வரும்போது
தலைவாசல் காத்து நிண்ணு
மண்ணுக்குள் ளிருக்கும்
பொன்னுங் கிடைக்
கிடுமா?"

வரும் போதும், போம் போதும் வாசலிலே நிண்ணு பார்க்கிறாயே! பார்த்தால் பசி தீருமா? தீராதே... ஆகவே, தாலியைக் கட்டிவிடு; தடையேதும் நமக்கேது? கூடி மகிழ்ந்திடலாம்; பாடிப் பறந்திடலாம். ஒரு வருஷங் குமரிருக்கேன்; உனக்கென்றே காத்திருக்கேன். கலியாண மாசமிது; கவனத்தில் வைத்துக் கொள். விவாகத்தைப் பற்றி விரைவிலே முடிவு செய்யேன்"—எனச் சொல்லி முடித்தாள்.

இந்த மாதிரியாக, பாதை நெடுக இருவருக்கும் 'வாய்ச் சிலம்பம்' நடந்தது...இதற்குள், ஊரும் வந்துவிட்டது; யாரும் பார்த்திடக்கூடாதே! எனவே, அவனிடமிருந்த கூடையைத் தன் தலைக்கு மாத்திக்கொண்டாள்.—இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தனர், பல்லை எல்லாம் காட்டினர், பிறகு ஆளுக்கொரு பாதையாய்ப் பிரிந்து நடந்தனர், அந்தப் 'பிரியாத செல்வங்கள்.'

— அ. பிச்சை.

தாலி கட்டியவன்

அன்புள்ள

பப்பா,

ஒரு வாரமாக உடம்பிற்கு சுகமில்லே. ஆனாலும் பத்து ரூபாய் அனுப்பியிருக்கிறேன். எப்படியும் பார்த்துக்கொள். மதுவின் உதவி இருக்குமென்றே எண்ணுகிறேன். குழந்தையை நன்ருகக் கவனித்துக் கொள். மற்றவை பின்பு எழுதுகிறேன்.

உனது அன்புள்ள

ராசா.

"லெட்டரைப் பாத்தியா அண்ணே. இப்பிடி அஞ்சும் பத்தும் அனுப்பறதைக் காட்டி—சும்மா ஒண்ணும் அனுப்பாமலே இருந்திருந்தா இவ்வளவு தான்னு எம் போக்கிலெ இருந்திருப்பேன். கொழந்தை கெடக்கிற கெடையும் இங்கே இருக்கிற நெலயும் கொஞ்சமாவது தெரியுதா. ஆம்பிளயா லச்சணமா தோணலே."

"அவனும் என்ன செய்வான், பப்பா. எதுக்கும் பணத்துக்குப் பணந்தானே வேணும். நாம முட்டிக்கிட்டா என்ன ஆவப் போவது?"

"உம்.....இதுக்கெல்லாம் நீ மட்டும் இல்லாம இருந்திருக்கணும். இதுக்கு முன்னே தெருவும் திண்ணையுமா அலைஞ்சிருக்கலாம்..."

"சரி...சரி...நான் கடைக்குப் போயிட்டு வாறேன். நானும் பேசிக்கிட்டே இருந்திட்டா, பொறவு உள்ள கஞ்சிக்கே ஆபத்து வந்திடும், கொழந்தையக் கெவினிச்சுக்கோ. மருந்து, நான் வரும்போது வாங்கிட்டு வாறேன்".

"சரி. உன் நல்ல கொணத்துக்கு—நான் என்ன கைமாறு செய்யப் போறனோ?"

"பப்பா. என்னெ இன்னும் நீ தெரியாமெ நடந்துக்கிட்றியேண்ணுதான் எனக்கு வருத்தமா இருக்கு. நான் இதையெல்லாம் எதுக்காகச் செய்வேன்... பப்பா எல்லாம் உனக்காகத்தான். இந்த உலகமே எங்கிட்டே இருந்தாக்கூட அதை நான் உனக்கு குடுத்திருப்பேன்.. என்னமோ அப்படியொரு ஆசை...இன்னும் சொல்லுதேன் நான் உன்னே......"

"நீ நல்லா படிச்சவன். உனக்குத் தெரியாத்ததும் இருக்கே. எங்கியோ கண்காணுத எடத்திலெ உன்னெ நம்பி என்ன நம்பி போன அவருக்கு துரோகம்செய்யலாமா...இன்னும் நான் என்னத்தைச் சொல்ல? நீ கடைக்குப் போ, அண்ணே. நீ கடைக்குப் போ..."

"போறேன் பப்பா. கொழந்தையை கவினிச்சுக்கோ".

★

என் ராசாவுக்கு!

லெட்டரும், பணமும் வந்தது. கொழந்தை பாடு ரொம்ப மோசமாப் போயிட்டே இருக்கு. எப்பவும் "அப்பா-அப்பா'ண்ணு தான் மொணக்கம். நீங்களும் ஒடம்புக்கு சுகமில்லாமெ கொண்டு அங்கே கெடந்து சாகவேண்டாம். உள்ளதெ குடிச்சிக்கிட்டு இங்கேயே கெடக்கலாம். பேசாமெ வேலையை விட்டு விட்டு வரவும். மது அண்ணன் தயவால் எல்லாம் நடக்குது. எவ்வளவு நாளுதான் அப்பிடி நடக்கிறது. மற்றது பின்னல். இந்த லட்டர் பார்த்ததும் பொறப்பட்டு வரவும்.

உங்கள் அன்புள்ள.

பப்பா.

"அப்பா ஏம்மா வரலே...அப்பாவை பாக்கணும் போல தோணுது. வருமாம்மா, அப்பா?"

"வரும்".

"ஏம்'மாமா எங்கப்பா வருமா?"

"வரும். வராட்டிப் போனு நான் கூட்டியாறேன். நீ தூங்கிக்கோ கண்ணு".

"தூங்கி முழிச்சப்புறம் அப்பா வருமா?"

"வரும். நீ தூங்கு!!'

"எனக்கு பயமா இருக்கண்ணே..."

"இந்த பயம் அவனுக்கில்லா இருக்கணும்! உம் நீ கொஞ்சம் பேசாம இரு பப்பா. அது தூங்கட்டும்".

"நான் பெத்தவ என்னுலெ சும்மா இருக்க முடியில்லே. வயித்திலெ தீயை வாரி எறச்சாப்பிலே இருக்கு".

"பேசாமெ இரி. நோயும் நொக்காடும் பிள்ளைகளுக்கு வரும். அதுக்கு, அழுதா தீந்திருமா? மருந்தெக் கொஞ்சம் குடு. பயப்படாதே நான் இருக்கேன்".

★

"பப்பா! கொழந்தெ தூங்கிட்டுதா?"

"இப்பத்தான் கண்ணெ மூடீருக்கு!"

"என்னத்தை நினைச்சுக்கிட்டிருக்கே?'!

"என்னத்தை நெனைக்கிறது. என் தலையிலெ எழுத்தைப்பத்தி நினைச்சிக்கிட்டிருக்கேன்"

"அவன்கிட்டேருந்து பணம் வந்துதா?"

"போட்ட லெட்டருக்குக்கூட பதிலே இல்லை. ஆம்பிள வந்து வாச்சுதா நம்ம கிரகம். அப்பிடி ஆயிப் போச்சு".

"என்ன ஆனாலும் பொம்பிள புத்தி கிழ்புத்திதான். செய்யிறதெ நேராச் செய்யாமெ விதி, 'கிரகம்'ண்ணு என்ன அர்த்தம். பாப்பா?"

"ஒனக்கு சாமியில்லே. சாத்தாயில்லே. இதிலெ ஒண்ணும் நம்பிக்கையில்லே. நம்பினு சாமி நாம்பாட்டி கல்லு".

"ஐயோ! அது போவட்டும் பப்பா! இந்த நெலவெப் பாரு. எவ்வளவு அழகாயிருக்கு..."

"..........."

"என்ன பப்பா பிடிக்கலியா?"

"ஊம்"

"பிடிக்கலியா? பப்பா நான் எவ்வளவு காலம் இன்னும் காத்திருக்கணும் பப்பா".

"அண்ணு'ண்ணு உன்னெக் கூப்பிட்டுட்டேன். எங்கியோ கண்காணுத எடத்தில் இந்தக் கொழந்தையைத் தந்தவன் இருக்கவும் செய்ருன். நீ படிச்சவன்... நீ நல்லா படிச்சவன். நான் பொம்பிளெ".

"அழாதெ பப்பா! எனக்கு ஒம்மேலேஆசையிருக்கு. ஆன... அழாதெ பப்பா. நான் உன்னெ வேதனைப்படுத்துறேன்! நீ என்னெ வெறுக்கிறியோ என்னமோ! அழாதெ பப்பா".

★

என் ராசாவுக்கு,

முன்னுல் எழுதிய லெட்டருக்கும் பதில் இல்லெ. இங்கே கொழந்தை சாவக்கிடக்குது. எனக்கு ஒண்ணுமே தோணலே. வேலையும் வேண்டாம் ஒண்ணும்

— 10-ம் பக்கம் —

அம்பேத்கார் வாழ்க்கை வரலாறு

பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார் என்பது, டாக்டர் அம்பேத்காரின் முழுப் பெயராகும்.

63 வயதாகும் அம்பேத்கார் 1893-ம் ஆண்டு பிறந்தார். சதாராவிலும் பம்பாயிலும் துவக்கக் கல்வி பெற்ருர்.

பரோடா கெய்க்வாரிடம் உபகாரச் சம்பளம் பெற்று அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகம் சென்று, பொருளாதாரம் முதலியன பயின்ருர்.

1917-ம் ஆண்டில் ஜெர்மனி சென்று, பின் அங்கிருந்து லண்டன் சென்று பொருளாதார வர்த்தகக் கல்வியில் டி. எஸ். சி. பட்டம் பெற்ருர்; பின், லண்டனிலேயே சட்டப் படிப்பும் பெற்ருர்.

இந்தியா திரும்பியதும் சிலநாள் வழக்கறிஞராயிருந்துவிட்டு, சட்டக் கல்லூரி ஆசிரியராகி, பின், சட்டக் கல்லூரியின் முதல்வராக உயர்ந்தார்.

அரசியல் நுழைவு

தாழ்த்தப்பட்டவரது நிலை அவரை அரசியலுக்கு இழுத்து வந்தது.

லண்டனில் 1930, 1932-ம் ஆண்டுகளில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடுகளில் அவர் தாழ்த்தப்பட்டவரின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார்.

1942-ம் ஆண்டில் வைசிராய் கவுன்சில் (பொருளாதார) உறுப்பினரானுர்; பின், 1946-ம் ஆண்டுவரை அந்தக் கவுன்சிலில் பணியாற்றிவிட்டபின், அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மந்திரியானுர்!

பின், 1947 ஆகஸ்டு 15-ல், நேரு மந்திரிசபை அமைத்தபோது, அவர் சட்ட மந்திரியாகப் பதவி ஏற்று 1951-வரை பதவி வகித்தார்.

அவர், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் முதன்மையானவராவார்.

ஆசிரியர்

பல புத்தகங்கள் எழுதியுள்ள அவர், சிறந்த ஆசிரியராவார்; பொருளாதார, அரசியல் துறைகளில் அவர் நூல்கள் எழுதியுள்ளார்.

புத்த மதத்தைத் தழுவினுர்

அண்மையில்தான் அவர் 2 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களோடு, குடும்ப சகிதமாகப் புத்தமதத்தைத் தழுவினுர்.

தைமூரின் காதலி

★



★ தென்னரசு ★

6

யஜ்ஞானியின் கோபம் உம்மதுலின் போக்கைக் திருப்பிவிடுமென சேமியா எதிர்பார்த்தாள். கதையை நிறுத்திவிடுவாள் மகள் என அவள் நம்பினுள். ஆனுல் உம்மதுல், அவள் தந்தையின் முகத் தோற்றத்தைக் கவனித்தும் கவனிக்காததுபோல் கதையைத் தொடர்ந்தாள்.

''படைவீரன் அந்தப் பதுமைப் பெண்ணின் உள்ளங்கையில் ஒரு முத்தமிட்டான். செம்புத்துப்பறவையின் இறக்கைபோன்ற பூக்கரத்தில் அவன் முத்தமிட்ட ஓசை புற்றில் கிடந்த பாம்பையும், புதரில் இருந்த பறவைகளையும்கூட மிரள வைத்திருக்கவேண்டும். அமைதியான நேரமல்லவா !

வாலிபன் விடைபெற்றுச் சென்ருன். பிரியும்போது அவனது விழிகளை ஏக்கத்தோடு பார்த்தாள் அந்த அழகுப் பெண். ''எல்லாம் உனக்காகத்தானே ! ஏன் மனம் வெதும்பி நிற்கிருய்? ஆற்ருேரத்தில், ஆதவன் மறைந்த பின்பு அணைத்து மகிழும் நாம் அம்சதூளிகா மஞ்சத்தில்இருப்பதற்கான முன் வேலைகள் கண்ணே, இதெல்லாம் ! நாளை இரவு திரும்பிவிடுவேன். சூரியன் வந்தால்தான் வாழ்வு என்ற நிலையிலிருக்கும் சூரியகாந்திப் பூக்கள்கூட மழைகாலம் முழுதும் எப்படியோ இருக்கத்தானே செய்கின்றன ! உனக்கென்ன பூங்கொடியே ! ஒரு பகல் ! ஒரு இரவு ! பூமியின் முக்கால் சுற்று'' என்று காதலனின் விழிகள், மைவிழி மாதரசிக்குச் சமாதானம் சொல்லுவதுபோலிருந்தன.

காற்றை எதிர்த்து, கடும்இருட்டைக் கிழித்துக்கொண்டு அந்த அழகிய இளைஞன் மேல்திசை நோக்கிக் கிளம்பினுன்.

வண்டார் குழலி - கண்டோர் குழம்பும் கனிப்பெண்ணுள், ஆற்றங்கரையின் ஓரத்தில் தனிப் புருவாக நின்ருள். தத்தளித்தாள். எதிரியின் வல்லமையை எண்ணிப் பார்த்தாள். 'என் தலைவன் கோழையல்ல !' என்று அவளால் எண்ணிடத் துணிவில்லை. ஊக்கத்தால் வெற்றி விளையும் போர்த்திறன் மட்டும் போதாது உளவறிய, என்று அவள் திடமாக நம்பினுள். தளபதியின் மகளல்லவா ! களம்பல கண்ட சேனுதிபதியின் வாழ்க்கையில் குறுக்கிட்ட சம்பவங்களையெல்லாம் அவள் கேள்விப்பட்டிருக்க மாட்டாளா ? - அவள் கண்கலங்கி நின்ருள். பனி படர்ந்த காலை அல்லியைப் போன்ற கண்ணீர் படிந்த விழிகளை குதிரை சென்ற திசைப் பக்கமாகத் திருப்பினுள். கொஞ்ச தூரத்தில், கனிதின்னும் வௌவால் ஒன்று பாம்பைப்போல் சீறிக்கொண்டு ஆற்றின் குறுக்கே பறந்துபோனது. சற்று முன்புதான் உலகமே தன் காலடியிலே கிடப்பதாகக் கருதினுள்; மன்னர்களையும் அவர்களை வென்ற மாமுனிவர்களையும் குற்றக்கூண்டிலே நிறுத்தி வைத்து விசாரணை நடத்திடக்கூட அவளுக்குத் தைரியமுண்டு என்று நடந்துகொண்டாள். நிலவும், நீலவானும் தனக்காகவே இருப்பதாகக் கர்வங்கொண்டிருந்தாள். பாவம் ! இப்போது அவள் கோழையாகிவிட்டாள் ! அவளுடைய அழகை பீதி பிடித்து உலுக்கிக்கொண்டிருக்கிறது. வேழப்படை எம்மாத்திரம் என்றவள் நெஞ்சில், வேலியின் ஓரத்தில் கிளம்பும் 'சரேல்' என்ற சிற்ருெலிகூட 'பேய்க்கூச்ச'லாகப் பட்டது. இடையிலே ஓடியது இரண்டு நாழிகைகள் ! அப்பப்பா ! மனித மனத்தில் எத்தனை மாற்றங்கள் ! என்னென்ன கோலம் ! வாழ்வாசையின் கோபுரத்தில் உலாவியவர்கள், வதனங்கள் கருக வதங்கிய உள்ளத்தினராகி விடுகிருர்கள்-சாவிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் சதங்கை கட்டி ஆடத் தொடங்கி, ஜனத்தின் விழிகளைக் கொத்திக்கொண்டே போய்விடுகிருர்கள். வீரன் கோழையாகிருன் கோழை துரோகியாகிருன்; அந்தப் பச்சைக்கொடி, — 'இந்த உயிர் இளமையோடு அழிந்துபோகட்டும்' என்று கருதிய குமரிமயில்—மனம் வேறு உடல்வேறு ஆனுள், தரையிலே பாதம் படிந்தது. தையலின் உள்ளமோ அவனைத்தொடர்ந்தது.''

சேமியா பெருமூச்சு விட்டாள். உம்மதுல் என்னதான் சொல்லப்போகிருள் ? யாருடைய கதை இது ? எப்போது நடந்தது ? - சேமியாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. புருஷனைப் பார்ப்பாள் ! புருஷன் புருவத்தை நெறிப்பார். ஐந்தாண்டுகளுக்குமுன் துருக்கியின் துணைத்தளபதி கொலையுண்டு செத்ததற்கும் இதற்கும் தொடர்பு இருக்குமோ என்றுகூட யஜ்ஞானி ஆரம்பத்தில் எண்ணினுர். பிறகு ஒருவாறு அவர் அவனையே திருப்தி செய்துகொண்டார். 'ஜாபர் அலி' உத்தமனுயிற்றே ! அவனுக்கு ஏது காதலி ! என்று யஜ்ஞானி சமாதானமடைந்து கொண்டார்.

''சொல்லு கண்ணே! கதை நன்ருகத்தானிருக்கிறது. அப்புறம் என்ன நடந்தது ?''- சேமியா விடவில்லை, மிக ஆவலோடு கேட்டாள். அவள் அதைக் கதையாகவே எண்ணினுள். அதில் மர்மம் இருப்பதாக அந்த வயோதிகச் சீமாட்டி கருதவில்லை.

உம்மதுல் கதையைத் தொடர்ந்தாள் :

''நடுநிசி ! கருங்குதிரை அரித்துவாரை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. இப்போது இன்னொரு குதிரை அந்த வீரனைப் பின் தொடர்ந்தது. இரண்டாவது சென்ற வெள்ளைக்குதிரையில் அமர்ந்திருந்த வாலிபன் முன்னுடிச் சென்ற படை வீரனுக்குப் பாதுகாவலாகப் போவதுபோலவே தோன்றியது. குழந்தையின் கிலுகிலுப்பைச் சத்தத்தைப்போல் ஓசையிட்ட வண்ணம் ஓடிக்கொண்டிருந்த கருங்குதிரை அரித்துவாருக்குள் நுழைந்தது.

பல வர்ணங்களில் பட்டை தீட்டப்பெற்ற அழகான கூடாரங்கள் அங்குமிங்குமாகப் போடப்பட்டிருந்தன. கோட்டை கொத்தளங்களை, நாட்டையாளும் மன்னர்களின் மணிமாடங்களை அழகானது, வசிகரிக்கக்கூடியது என்கிருர்களே, பணம் தின்னும் அந்த மாளிகைகளெல்லாம் அரித்துவாரத்து டேராக்களிடம் எம்மாத்திரம் ? கிரேக்கநாட்டுப் போர் வீரனைப் போல் கம்பீரமாக இருக்கும் சேவலை மறந்துவிட்டு, எங்கோ பொந்தில் அடைந்துகிடக்கும் சிறு பறவையை 'சிங்காரப் பைங்கிளியே' என்று அழைப்பதைப் போல் கற் கட்டிடங்கள்தான் அழகானது என்று சொல்கிருர்கள். அம்மா, நீதான் சொல்லேன், சேவல் நமது வாழ்க்கையோடு இணைந்தது; காலைச் செங்கதிரோனேடு நம் நினைவுக்கு வருவது; ஏழைகளும் பணக்காரர்களும் நம்புவது. கிளி அப்படியா இருக்கிறது ? பொற்கூண்டு வீடு, வெள்ளிக் கிண்ணத்தில் பால், கனிந்த வாழைப்பழம் ! பச்சைக்கிளி பாட்டிசைக்குமாம் ! அதென்ன சாரங்கியா பாடுகிறது !''

சேமியா, உம்மதுலின் பேச்சுத் திறனில் லயித்துப்போயிருந்தாள். அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியும், பிரமிப்பும் மாறி மாறி ஒளிவிட்டன.

உம்மதுல் தொடர்ந்தாள்:

''மலர்களை வண்டு வட்டமிடுவதைப்போல் ஆயுதந்தாங்கிய போர் வீரர்கள் கூடாரங்களைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தனர். துருக்கிய வீரன் குதிரையை விட்டு இறங்கி ஒரு மஞ்சள் கூடாரத்திற்குள் நுழைந்தான். அந்தக் கூடாரத்தின் வாசலில் நின்றவன் துருக்கிய வீரனை நன்ருகப் பரிசோதித்து விட்டு உள்ளே அனுப்பினுன். வெளியிலே உலவிக்கொண்டிருந்த போர் வீரர்கள் மிக ஆவலோடு உள்ளே நடைபெற்ற உரையாடலை ஒதுங்கி நின்று கேட்டுக்கொண்டிருந்தனர்.

உள்ளே நடைபெற்ற உரையாடல் இது :

''தங்களை நெடுநேரமாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். முன்னிரவிலேயே வருவதாகச் சொல்லியனுப்பியிருந்தீர்களல்லவா !''-துருக்கிய வீரன் கூடாரத்திற்குள் நுழைந்ததும், இப்படி ஒருவர் உள்ளே பேச்சைத் தொடங்கினுர். அந்தக் குரலிலே கம்பீரமிருந்தது. ராஜ நடை காணப்பட்டது.

''ஊர் உறங்கவேண்டாமா? நான் செய்யத் துணிந்திருக்கும் காரியம் சாமான்யமானதா ? துருக்கிய சமுதாயத்திற்கே எதிரானதல்லவா ! உளவறிய வருவதாகத்தான் என் காதலியிடம்கூடப் பொய் சொல்லி வந்திருக்கிறேன். நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்ட எங்கள் தளபதியே உளவறிய என்னை அனுப்பியதாக அவளிடம் சொல்லிவிட்டேன்'' என்று துருக்கிய வீரன் பதில் பேசினுன். பயமும் தளர்ச்சியும் நெளிந்தன அவனுடைய குரலில்.

''அதனுலென்ன ! நீங்களென்ன துருக்கியை நசுக்கவா போகிறீர்கள் ! துருக்கியில் நடக்கப்போகும் பெரும்போரைத் தடுக்க வந்திருக்கிறீர்கள். கோட்டையில் யார் கொடி பறந்தாலென்ன ! ரத்த ஓட்டத்தைத் தடுப்பதுகூட ஒரு ராஜதந்திரம் தானே !'' – என்று சிரித்துக்கொண்டே சொன்னுர் கூடாரத்தின் சொந்தக்கார அதிபதி.

கூடாரத்துக்கு வெளியில் நின்று ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த வெள்ளைக் குதிரைக்காரத் துருக்கிய வீரனின் முகக்குறி மாறியது. சாந்தம் பொதிந்த கர்வத்தோடு, தானே தலையசைத்துக்கொண்டு வேகமாக அந்த இடத்தைவிட்டுக் கிளம்பிவிட்டான். சிறகடித்துச் செல்லும் வெண்புருபோல அந்தக் குதிரை அந்த இடத்தை விட்டகன்றது.

சில விநாடிகளுக்குப் பிறகு புதிய தெம்போடு, எதிர்காலத்து வெற்றிக் கனவு முகத்தோடு கூடாரத்தை விட்டு வெளியே வந்தான் துருக்கியப் 'போலி உளவாளி'. எதிரிப் படைத்தலைவன் அன்புமுகம்காட்டி, அவனைத் தட்டிக்கொடுத்து வழியனுப்பினுன். கூடாரத்தைக் காத்துக்கொண்டிருந்த காவலர்கள், கருங்குதிரைத் துருக்கிய வீரனை தனக்குக் கிடைத்த புதிய 'எஜமானன்' என்று எண்ணித் தலை வணங்கி நின்ருர்கள். கருங்குதிரை தலைதூக்கிக் கால் கிளப்பியது. போகப் போக அதனுடைய வேகம் அதிகரித்தது. விடியப்போகிற நேரம் ! யாரும் பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில் வீரன் குதிரையைத் தட்டினுன். நெருப்புப் பறந்தது குதிரையின் குளம்புகளிலிருந்து.

நிலவொளியில் துருக்கியின் உயர்ந்த கோட்டை மதில்கள் சாம்பல் பூத்தாற்போல்அவனுக்குத் தெரிந்தன வந்துவிட்டோம் என்று மகிழ்ந்தான். அவன் நகருக்கு வெளிப்புறத்தில் வந்துகொண்டிருக்கையில் முன்னுடி வந்த வெள்ளைக்குதிரை வீரன் வழி மறித்துக்கொண்டான். கருங்குதிரையின் கடிவாளத்தருகே வெள்ளைக்குதிரை மோதிக்கொண்டு நின்றது.

(தொடரும்

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 15—12—56 ‖ இதழ் 16

வாழ்க நின் புகழ் !

ஜெகமே எதிர்த்தாலும் சேரிகளுக்குப் பரிந்தே போரிடுவேன் என முழக்கமிட்ட சேனுதிபதி அவர். ஜனப் ஜின்னு அவர்களுக்கும் அவர்களது பெருந்தொண்டுக்கு ஈடு இணைகட்டி மதிக்கத்தக்க துணிவுமிக்க அரசியல் முன்னேடி அவர். எந்தத் தீய சக்திகள் தன்னை எதிர்த்து வந்தாலும் செவிடாக நடித்தும், செம்பட்டு வாய்திறந்து சிரித்தும், எதிரிகளை மடக்கிய உத்தமர் காந்தியாரையே திணறடிக்க வைத்த அரசியற் பேரறிஞர் அவர். நாஸ்திகத்தைப் பற்றிப் பேசாமலே, எவை இந்த நாட்டில் நாஸ்திகம் எனக் கருதப்படுகின்றனவோ அந்தக் கருத்துக்களுக் கெல்லாம் முடி சூட்டி மகிழ்ந்தவர். இவ்வாறு, ஆட்சி பீடத்திற்குப் பூச்சாண்டியாகவும், மிதிபட்டுக் கிடக்கும் சமுதாயத்தின் மெய்க்காப்பாளராகவும் வாழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களின் மறைவால் ஜனநாயகம் இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு அங்கத்தை இழந்துவிட்டது என்று கூடச் சொல்லலாம். தேய்ந்துபோன பழைய முத்திரையை வைத்துக் கொண்டு தேசமாளும் காங்கிரசார் செய்துவரும் தகாத காரியங்களைத் தட்டிப்பேசினர், வெட்டிப் பேசினர் ஒரு காலத்தில் ஜின்னு. காந்தியாரை மதிக்கிறேன் ; அவருக்கு நான் கௌரவமளிக்கிறேன். ஆனல் எனது சமுதாயத்தைப் பொறுத்தவரை காந்தியாரது வேண்டுகோளை நான் எதிர்க்கிறேன்—என்று முழங்கினர் ஜின்னு. அந்த ஜின்னுவுக்குப் பிறகு, டில்லியின் பக்கத்தில் நின்றுகொண்டு, தனது நெஞ்சில் பட்டதை, எவர் முகம் கோணினுலும் கவலையில்லை என்று பொறி கிளம்பப் பேசியவர் டாக்டர் அம்பேத்கார்தான் என்பதை ஏழையர் உள்ளம் மறவாது. எவரையும் எளிதிலே திருப்தி செய்ய முடியாத வகையில் மனித இனுடைய ஆசைகள் வளர்ந்துவிட்டிருக்கிற இந்தக் காலத்தில் மூன்று லட்சம் பேரைத் தனக்குப் பின்னேடிகளாக அழைத்துக் கொண்டு பயணம் நடத்தி புத்த மதத்தில் சேர்ந்த பெருமை சரித்திய உலக வரலாற்றில் டாக்டர் அம்பேத்காருக்குத் தான் உண்டு.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சட்ட நிபுணர்களாலேயே 'சட்ட நிபுணர்' என்று புகழப்பட்டவர். ஒட்டிப் பேசமுடியும் என்ற நிலையிலிருந்த வாதங்களில் கூட அது சமுதாயத்திற்குத் தீது என்று கண்டு பலமுறை அதே வாதத்தை வெட்டிப் பேசி வெற்றி பெற்றிருக்கிறர் அம்பேத்கார். சட்டத்தை, சாதுர்யமான வாதத்திற்கு அவர் பயன்படுத்திக் கொண்டதில்லை. இந்நாட்டிறைக்கு விளக்காக - ஏழைகளுக்குத் துணைவனக - தீயவர்களுக்குக் கூற்றுவனக அவர் சட்டப் புத்தகத்தை மதித்தார்.

மனித சமுதாயம் தலைமுறை தலைமுறையாக வெவ்வேறு உருவிலே வளர்ந்து வந்தாலும், நல்லவர்கள் - நாணயமானவர்கள் - நீதிமான்கள் ஒரேமாதிரித் தான் வாழ்கிருர்கள். அத்தகையோர் மிகக் குறைவு ! அவர்களில் இந்தத் தலைமுறையில் தோன்றி மங்காப் புகழ்பெற்று இறுதிவரை ஏழைகளின் 'நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவே வாழ்ந்து விட்டு அறிஞர் அம்பேத்கார் கண்களை மூடிவிட்டார். அவரது இடத்திற்கு ஏற்றவர் ஒருவர் வரும்வரை நமது துயரம் அடங்கப் போவதில்லை.

அவரது தொண்டும், சாதனைகளும் சாகாத புகழுடம்புகளாக இருந்தாலும் 'அம்பேத்கார் இருந்தால் இப்படியா இருக்கும் ?' என்ற வாக்கியம் இந்தத் தலைமுறை முழுதும் ஒலிக்கத்தான் செய்யும்.

அவரது பிரிவால் வருந்தும் அனைவருடனும் நாமும் பங்கு கொள்வோம்.

டாக்டர் அம்பேத்கார் மறைவு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்

தோழர் இரா. நெடுஞ்செழியன்

அவர்களின்

அனுதாபச் செய்தி

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கும் நலத்திற்கும் அயராது அரும்பாடுபட்டு அரிய நன்மைகள் பல ஆற்றிவந்த மாபெருந் தலைவரும், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முக்கியமான சில அரசியல் பேரறிஞர்களில் ஒருவரும், சிறந்த பகுத்தறிவு வாதியுமான டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் திடீரென இயற்கை எய்திய சேதி கேட்டுத் திடுக்குற்றேன். அவரது ஈடு செய்ய முடியாத இழப்பு, ஆழ்ந்த துக்கத்தையும் துயரத்தையும் தருகிறது. அவரைப் பிரிந்து வருந்தும் உற்றூர், உறவினர், நண்பர் ஆகியோர்க்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★

மகளிர் மன்றத் தலைவர் அனுதாபம்

சமுதாயத்தின் அடித்தளத்தில் பிறந்து சொல்லொணுக் கஷ்டப்பட்டு பாரிஸ்டராகி தன் சமூக முன்னேற்றமே குறிக்கோளாகப் பணி புரிந்தவர். சமுதாயத்திலுள்ள பள்ளமேடுகளைச் சமப்படுத்த அரசியல் மன்றத்தில் சட்ட உறுப்பினராக அமர்ந்து இந்திய நாட்டின் அரசியல் சமுதாய சட்டத்தை உருவாக்கித்தந்த செம்மல். பெண்களின் உயர்வுக்காக சொத்துரிமை, விவாக ரத்து முதலிய உரிமைக்காக சட்டம் இயற்றிய விடுதலை வீரர்! அகில உலகப் புகழ் ஆசியாவின் ஜோதி இந்நாட்டுப் பிரதமர் பண்டித நேருவால் புரட்சி வீரர் எனப் பாராட்டப்பட்டவர். அன்னர் தூங்கினர். மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.

அவரது மறைவு பகுத்தறிவு இயக்கத்திற்கே பெரும் நஷ்டம். அதைக் குறித்து மகளிர் மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

வெற்றிச் செல்வி அன்பழகன்,
மகளிர் மன்றச் செயலாளர்.

சத்தியவாணி முத்து,
மகளிர் மன்றத் தலைவர்.

★

சமூகத்தின் ஒளி மறைந்தது

தலைவர் டாக்டர் அம்பேத்காரின் திடீர் மறைவைக் கேட்டு திடுக்கிட்டு, அதிர்ச்சியுற்றுக் கண்ணீர் சொரிந்தேன். அந்தோ ! தாழ்த்தப்பட்ட ஆறு கோடி மக்களுக்கு, தளராமல் உழைத்து, அம்மக்களை இந்து சமூகத்தினர் மானிடப் பிறவிகளாக உணரும் படிச் செய்த உத்தமர். ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்கு ஓயாமல் போராடிய தனிப்பெருந் தலைவர் நம்மினின்றும் பிரிந்தார். தொழிலாளிகளின் இடுக்கண்களைந்து தொழிற்சட்டமியற்றிய தொழிலாளர் காவலன். பெண்களின் சுதந்திரத்திற்காகப் போராடி பெண் உரிமைச் சட்டமியற்றிய பேராளன். இந்து மதத்தின் இழுக்கை எடுத்தோதி புரட்சி செய்த புரட்சிவீரன். இந்து சட்டத்தை அமைத்த சட்ட சிற்பி. கல்வியில் சிறந்த மேதாவி. எதற்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த தீரன் டாக்டர் அம்பேத்கார் இவ்வுலகினின்றும் மறைந்தார். அவர் மறைவு பொதுவாக இந்திய தேசத்திற்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஈடு செய்யமுடியாத நஷ்டம். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கலங்கரை விளக்கமாக ஒளி வீசிய அறிஞர் அம்பேத்காரின் மறைவு இச்சமூகத்தினரின் எதிர்காலத்திற்குப் பெருத்த ஊனமாகும். ஒதுக்கப்பட்ட சமூகத்தினருக்கு ஓயாமல் உழைத்த உத்தம தியாகியை நாம் என்றென்றும் மறக்கவே முடியாது.

மீனம்பாள் சிவராஜ்.
முன்னுள் தலைவி, தாழ்த்தப்பட்ட சம்மேளனம்.

தேர்தல் வருகிறது; தெரிந்துகொள்ளுங்கள்!



7. டி. டி. கிருஷ்ணமாச்சாரி

[‘ஐயா பழனிமலை வேலா’ என்ற மெட்டு]

டி. டி. கிருஷ்ணமாச்சாரி-இவர்
திருக்கதை சொல்லுவேன் கேளீர்!
பாட்டிப் பழங்கதை கூறி-பணம்
பறிக்கும் குலத்து சம்சாரி…திரு… (டி. டி)

ஆளடிமை கொள்ளவந்த தாசி-எனும்
ஆங்கிலர்க்குச் சாமரங்கள் வீசி
தோள்கொடுத்துப் பாசமொழி பேசி-தன்
தொந்தியினை ‘ரொப்ப’ வைத்தார் சீசீ! (டி. டி)

வெள்ளையரோ டொப்பந்தம் கொண்டார்-பல
வித்தி லிறக்குமதி கண்டார்!
கொள்ளையெனக் கோடிப் பணம் சேர்த்தார்-இன்று
கொடிகட்டி ஆளுகிறார் பாரீர்! (டி. டி)

‘நாடுமெச்சும்’ நாயகர்கள் கூடி-இந்த
நன்றிகெட்ட பேர்வழியைத் தேடி
பாடுபட்ட வீரரெனக் கூறி-இன்று
பதவியில் வைத்து விட்டார் பாரீர்! (டி. டி)

செக்கிழுத்து நொந்தவர்கள் எங்கே ?-பணம்
சேர்த்து மகிழ்ந்தவர்கள் இங்கே!
வெட்கங் கெட்ட காங்கிரசுத் தோழா-உங்கள்
வேஷத்துக்கு வாயும் ஒரு கேடா (டி. டி)

காமராஜ் கம்பெனியில் கூட்டு-வாயில்
காங்கிரசை ஆதரிக்கும் பாட்டு!
ஆமடா தம்பி! உன் ஓட்டு-அதை
அள்ளிவிடத் தான் இந்த வேட்டு! (டி. டி)

தேர்தலுக்கு நின்று தெருவோடு-ஓட்டுச்
சேர்க்க இவர் வந்துவிடும் போது
ஆர்வமுடன் கொண்டுவந்து போடு-அது
ஆண்டி கையில் ஏந்தும் திருவோடு! (டி. டி)

— கதா.

தேர்வேந்தன் நளனோடு காதல் மாது
சிலைபோலும் தமயந்தி அணையின் மீது
போர்செய்த கலையழகை உணர்ச்சி யோடு
புகழேந்தி சொல்கின்றான்; மங்கை அங்கு
ஏர்பூட்டி உழுதாளாம்! எவ்வா றென்றால்
இருகொங்கை ஏராக, மாதின் மேனி
ஏர்சேர்ந்த நுகமாக வியர்வை நீரே
எழில்நீராய்ப் பாய்ந்தோட, காத லுக்கு

வரப்பெடுத்து உழுதாளாம்! காம மென்னும்
வளமான பயிர்வளர்த்து மகிழ்வுற் றாளாம்!
பரிப்படையும் கரிப்படையும் பெற்ற மன்னன்
பாவையினால் உழப்பட்டான்! தானும் அந்தச்
சிறப்புடைய உழவுக்குச் சிரங்கு னிந்தான்
சில்லென்று பூரித்தான்! மெய்ம றந்தான்!
வரப்பெடுத்த காமத்தை வரம்பு மீறி
வழங்குகிறான் என்றாலும் மணக்கும் வெண்பா!

அது இது :

அங்கைவேல் மன்னன் அகலம்எனும் செறுவில்
கொங்கையேர் பூட்டிக் குறுவியர்நீர்-அங்கடைத்துக்
காதல்வரம் பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரில் மேலான கொம்பு

-நள. வெ. 203-

அதுதானா? மற்றொன்று! மன்ன னோடு
அழகுமயில் கலவிப்போர் புரிந்த செய்தி
‘கதகத’க்கத் தருகின்றான் கவிதை யாக!
காதலர்கள் மெய்கூடி மகிழ்ந்த போது
நதியாக வியர்வோடி, மன்னன் மார்பில்
நங்கையவள் கொங்கைவளர் குங்கு மத்தை
சேதில்சேதிலாய் வண்டலெனப் போட்ட தாகச்
செப்புகிறான்! படுபாவி! அனுப வந்தான்!

நதிகாண்போம் நீர்காண்போம் தேங்கி நிற்கும்
நல்லெழில்சேர் வண்டல்மண் காண்போ மேனும்
சதிபதிகள் கலவிக்குள் அவற்றைக் கொண்டு
தடவிவிட முயல்வோமா? செய்தான், வெண்பா
அதிபதியாம் புகழேந்தி! அவனைப் போல
அடுக்கழகு பிழையாமல் வெண்பாப் பாட
இதுவரைக்கும் வேறொருவர் பிறந்த தில்லை
இனிப்பிறப்பார் என்பதற்கும் உறுதி யில்லை!

அது இது :

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈர இளவண்டல் இட்டதே-நேர்பொருத
காராரும் மெல்லோதிக் கன்னியவள் காதல்எனும்
ஓராறு பாய உடைந்து.

-நள. வெ. 176-



மனம் போல வாழ்வு

11

அப்படிப் பேசினாரே தவிர தேசானந்தர் உள்ளத்தில் அவ்வளவு உறுதியில்லை; எப்போது எங்கிருந்து அவளைக் கண்டுபிடிக்கப் போகிறோம் என்ற பயமே மேலோங்கியிருந்தது. உலகத்துக்கு நல்லவனாக நடக்கவேண்டும் என்று விரும்பியும் நடந்தும் வந்த அவர், தனக்கு நேரும் தொல்லைகளை எண்ணிக் கலங்கினார். மாணிக்கம்தான் அறிவு கெட்டவன், அயோக்கியன் என்றாலும் சரசுவுக்குப் புத்தி எங்கே போயிற்று! தன்னிடத்திலேயே வளர்ந்த தன் சகோதரி தனக்குத் துரோகம் செய்துவிட்டதாகவே அவர் கருதினார். "எத்தனை குடும்பங்களைக் காப்பாற்றியிருக்கிறோம்? எத்தனை பேரை வாழ வைத்திருக்கிறோம்? நாட்டை வாழ வைப்பதற்கென்றே எத்தனை ஆண்டுகள் சிறையிலிருந்திருக்கிறோம்? தாள முடியாத துன்பம் நமக்கும் தானே வருகிறது?" என்று எண்ணமிடும்போது அவர் நெஞ்சம் கொதித்தது.

எல்லோருமே தன்னைப்போல இருப்பார்கள் என்று எண்ணுபவனைப்போல ஈடு இணையற்ற இளிச்சவாயன் உலகத்தில் வேறு எவனுமே இல்லை. எவ்வளவு அன்பு செலுத்துபவனும், தனக்கென்று ஒரு குடும்பம் இருப்பதையும், தனக்கென்று சில தேவைகள் இருப்பதையும் நினைவு கூர்ந்துதான் தீரவேண்டும். அப்படி நினைவுகொள்ளும் போது, அன்பு செலுத்துபவர்களிடம் கூட ஓரளவு பயனை அவன் எதிர்பார்த்துத்தான் ஆகவேண்டும். அப்படி எதிர்பார்க்கும்போதுதான் மனமாற்றங்களும் சச்சரவுகளும் தோன்றுகின்றன. ஆகவே இந்தச் சச்சரவுகள் எவனையும் விட்டுவிடாத விதிமுறைகளாகும். "உலகத்தில் யாராவது இந்த விதிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பார்களா?" என்று தேசானந்தர் தேடினார். ஆனால், அதுவரை அவருடைய வாழ்க்கை வரலாற்றில் வந்து போனவர்கள் யாருமே அப்படிப்பட்டவர்களாக இல்லை.

தேசானந்தர் உள்ளம் துக்கித்தது. "சிச்சி! என்ன இந்த மனித ஜாதி! நன்றி கெட்ட கூட்டம்! சுயநலத்தைக் கருதாத ஒரு விதி வரம்போடு வாழ்கிறவர்கள் யாருமே இல்லையே! திட்டிய மரத்திலே கூர் பார்க்கிறவர்கள் அல்லவா பெருகி விட்டார்கள்! இந்த ஜனங்களுக்கு உழைத்துத் தான் என்ன பயன்?" என்று எண்ணி எண்ணிச் சோர்ந்தார்.

x x x

ஓடிப்போன மாணிக்கமும் சரசுவும், கெட்டவர்கள் வந்து சேரும் 'பட்டணத்துக்'கே வந்து சேர்ந்தார்கள். வீட்டிலிருந்து சுமார் ஐயாயிரம் ரூபாய்களைத் திருடிக்கொண்டு வந்திருந்தான் மாணிக்கம். சென்னைக்கு வந்ததும் தன் பெயரை 'மான்காம்' என்றும், சரசுவின் பெயரை 'சாரஸ்' என்றும் மாற்றி வைத்துக் கொண்டு, கேட்போர்களுக்கெல்லாம் தான் ஒரு கிறிஸ்தவன் என்று கூறலானான். அவனும் சரசுவும் சென்னையில், வண்ணையம்பதியில் இருந்த ஒரு ஓட்டலில் தங்கினார்கள். வீட்டை விட்டு ஓடும் காதலர்களின் வழக்கமான முறைப்படி, அல்லும் பகலும் அறையிலேயே அடைபட்டுக் கிடந்தார்கள். காதல் வாழ்வில் புதுப் பாடங்களைப் பயின்றார்கள். மாணிக்கத்துக்கு வீட்டை விட்டு ஓடிவந்திருக்கிறோமே என்ற பயமோ, வீடுபற்றிய சிந்தனையோ, சிறிது கூட இல்லை. அவன் ஆண்மகன். எங்கெங்கு எதெது கிடைக்கிறதோ அங்கெல்லாம் அதையதை அனுபவித்து விட்டுத் தூர எறிந்துவிடும் பழக்கந்தான் ஆடவர்களின் தலையாய பழக்கம். மாணிக்கம் அதற்குப் புறம்பானவன் அல்ல. அவன் சரசுவை விரும்பினான். மனதாரக் காதலித்தான். தன் உயிரே அவளென்று நினைத்தான். அதே நேரத்தில் தன்னைப் பெற்று வளர்த்துப் பெயரிட்டு, சின்ன வயது முதல் சீராட்டி, பாராட்டி முன்னேற்றுவித்த தன் குடும்பத்தை மறந்து விட்டான். சிற்றின்பமே உலகத்தில் சிறந்த இன்பம் என ஆழ்ந்து ரசிக்க ஆரம்பித்தான். ஆனால் சரசுவின் மனமோ, காதல் இன்பத்தில் கலந்து திளைக்கின்ற வேளையிலும் தன் அண்ணனிடத்தும் அண்ணியிடத்துமே இருந்தது. "அண்ணா எவ்வளவு அன்பாக இருந்தார்? வெளியூர் கூட்டங்களுக்குப் போய் விட்டுத் திரும்பும் போது கூட, வந்ததும் வராததுமாக, 'சரசு எங்கே' என்றுதானே கேட்பார்? 'தங்கையின் திருமணத்துக்கு அந்தத் தலைவரை அழைக்க வேண்டும், இந்தத் தலைவரை அழைக்கவேண்டும்' என்றுதானே அடிக்கடி பேசுவார்? எவ்வளவு மனக்கோட்டைகள் கட்டியிருந்தார்?" என்றெல்லாம் எண்ணும்போது அவளது அப்பாவி மனது துடியாய்த் துடிக்கும். இரவிலே தூங்கும்போது தன்னையறியாது, 'அண்ணா, அண்ணா' என்று உளறுவாள். திடீரென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடிப்பாள். ஆனாலும் பருவப் பெண்களை அடக்கி ஆளும் பொல்லாத காதல் அவளையும் அடக்கியாண்டு விடும்.

இந்த நிலையில் ஒரு நாள் மாணிக்கம் வெளியிலே போயிருக்கும்போது சரசுவுக்கு ஒரு விநோதமான எண்ணம் தோன்றிற்று. "ஏன் தன் அண்ணனுக்குத் தான் இருக்கும் இடத்தைத் தெரிவிக்கக்கூடாது? இனி இருக்குமிடம் தெரிந்தாலும், 'ஏதோ நடந்தது நடந்து விட்டது' என்று மணமுடித்து வைத்து விடுவார். கோபிக்க மாட்டார். அவர் சுபாவம் அப்படி! கடிதம் எழுதினால் என்ன?" என்பதுதான் அந்த விசித்திரமான யோசனை. உடனேயே கடிதம் எழுதத் துவங்கினாள். எழுதியும் முடித்தாள். அவளே போய்த் தபால் பெட்டியில் போட முடியுமா? மாணிக்கத்தை எதிர்பார்த்தாள். மாணிக்கம் என்ன சொல்வானோ என்றும் பயந்தாள். அவனைச் சரிக்கட்டிக்கொள்ளலாம் என்று பின்பு தானே சமாதானம் அடைந்தாள்.

அன்று மாலை, வெளியில் சுற்றிக் கொண்டிருந்த மாணிக்கம் இரவு ஒன்பது மணிக்கு அறைக்கு வந்து சேர்ந்தான். கையோடு ஒரு வாடகைக் காரும் கொண்டு வந்திருந்தான். சீக்கிரம் புதிய உடைகள் அணிந்து கொண்டு, புறப்படும்படி அவளை அவசரப்படுத்தினான். 'சினிமாவுக்குப் போகத்தான் அவ்வளவு அவசரம்' என்பதைத் தெரிந்து கொண்ட சரசு, அந்தப் படபடப்பான நேரத்தில் எதுவும் பேசவேண்டாமென்று அவனோடு புறப்பட்டாள். இருவரும் பார்க்கப் போன படம் பிரபல நடிகர்கள் நடித்த 'பிருதிவிராஜ்'னே. எந்தப் பிருதிவிராஜனைப் புத்தகத்தில் கண்டு தேசானந்தர் புத்தகத்தை மூடினாரோ, அதே பிருதிவிராஜனைப் படத்தில் பார்க்க இருவரும் புறப்பட்டார்கள்.

படம் பார்க்கும்போது, பிருதிவிராஜன், ராணி சம்யுக்தையைத் தூக்கிச் செல்லும் கட்டம் வந்தவுடன் தன்னையறியாது சரசுவை அணைத்துக் கொண்டான் மாணிக்கம். அப்போது அதற்கு இணங்கிக் கொடுத்தாள் சரசு. அடுத்து, மகளின் பிரிவால் ஜெயச்சந்திரன் துடிக்கும் கட்டம் வந்தபோது, அவள் அழுதே விட்டாள். அவளை அறியாமல், 'அண்ணா' என்று அவள் வாய் முணு முணுத்தது. "என்ன சரசு?" என்று கேட்டான், திடுக்கிட்ட மாணிக்கம். "ஒன்றுமில்லை" என்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள் சரசு.

படம் முடிந்ததும், அறைக்கு வந்தார்கள் இருவரும். சரசுவின் நினைவில் அண்ணனும் அண்ணியும் நின்று குத்திக் குடைந்தார்கள். ஆனால், வெளியுலகை மறந்த மாணிக்கம் காதல் வெறியனாக நின்றான். தன்னுணர்வில்லாத அவளை ஒரு பதுமை போலத் தன் காதலுணர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டான். அதைத் தடுக்கும் அளவுக்குப் பக்குவம் பெற்றவள் அல்ல சரசு. மனதிலே அண்ணனும் அண்ணியும் இருந்தாலும் பருவத்தின் துடிப்பில் அவளும் அதற்கு இணங்கினாள். இரவு வெகு நேரம் கழித்தே இருவரும் தூங்கினார்கள்.

மறுநாள் சரசுவுக்குப் பொழுது விடிந்தபோதுதான், மாணிக்கத்துக்குப் பொழுதுபோயிருந்தது.

கண்ணதாசன்

ஆம்! அப்போது அவன் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தான். சரசு அவன் பிடியிலிருந்து மெல்ல நழுவி எழுந்தாள்.

தான் அண்ணனுக்கு எழுதி வைத்திருந்த கடிதத்தைத் தானே போய்த் தபாலில் போட்டுவிடுவது என முடிவு கட்டிக்கொண்டு புறப்பட்டாள். சென்னைபோன்ற பெரிய நகரத்தில் வாழ்ந்து பழகப்பட்டவளல்ல அவள். நாகரிகம், காலும் தலையும் மாறி அலங்கோலமாகக் கிடக்கும் பட்டிணத்தின் பரபரப்பைப் பார்த்தபடியே அவள் நடந்தாள். ஒவ்[illegible]வரையும் பார்த்து[illegible]ங்கே இருக்கி[illegible]ள். தனியாக ஒரு பெண் தபாலாபீஸ் இருக்குமிடத்தை விசாரித்தால், திடீரென்று கருணைமூர்த்திகள் வந்து [illegible]குதிப்பார்கள் சென்னை நகரில். அப்படி இரண்டுபேர் சரசுவைப் பின் தொடர்ந்தார்கள். ''வாம்மா! தபாலாபீஸ் இருக்குமிடத்தை நான் காட்டுகிறேன்'' என்று ஒருவன் முன்னுல் நடந்தான். இன்னெருவன், பின்னுல் ஜாடையாகக் கவனித்துக்கொண்டே நடந்தான். இருள் படிந்த நெஞ்சங்களோடு பழகியறியாத சரசு அவர்களோடு சென்ருள். எப்படியும் கடிதத்தைத் தபாலில் சேர்ப்பதே அவளது நோக்கமாக இருந்தது. அந்த இரண்டு ரௌடிகளும் சரசுவை, தங்கசாலைத் தெருவின் சந்துகளிடையே அழைத்துச் சென்ருர்கள். பல சந்துகளைக் கடந்த போதுதான் சரசுவுக்குச் சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. ஆவலும்,ஒருவித பயத்தோடும் குழப்பத்தோடும் அவர்களைப் பின் தொடர்ந்தாள். ஆள் நடமாட்டமில்லாத ஒரு இடத்திற்கு வந்ததும்,முன்னுல் போனவன் நின்று, 'இதுதான் தபாலாபீஸ்' என்று கையைக் காட்டினுன். அவன் உள்ளங்கை கறுப்பாக இருந்தது. சரசு அந்தக் கையைப் பார்த்தாள். அவளை அறியாது அவள் கண்கள் அந்தக் கையிலே பதிந்தன. அடுத்த விநாடி, அவள் மயங்கி விழுந்தாள்.

மாணிக்கம் பதினேரு மணிக்குத்தான் எழுந்தான். 'சரசு, சரசு' என்று அழைத்தான். சரசுவைக் காணவில்லை. குளிக்கும் அறைக்குச் சென்றிருக்கலாம் என்று கருதிக் கொஞ்ச நேரம் படுக்கையிலேயே உட்கார்ந்திருந்தான். குளிக்கும் அறை அவன் தங்கியிருந்த அறைக்கு வெளியிலே இருந்தது. அது, பொதுவாக எல்லாருமே குளிக்கும் இடம். நேரம் ஆக ஆக, குழப்பமடைந்த மாணிக்கம், எழுந்துபோய்க் குளிக்கும் அறையின் கதவைத் தட்டினுன். கதவு லேசாகத் திறந்தது. உள்ளிருந்து ஒரு முதியவரின் தலை வெளியே நீண்டது. ''என்ன வேண்டும்?'' என்று சற்று அதிகாரக் குரலில் முழங்கினுர் அவர். ஒன்றுமில்லை என்று இழுத்தபடி அறைக்குத் திரும்பினுன் மாணிக்கம். அவன் மனதை பயம் கவ்விற்று. ஒருவேளை, ஊருக்கே போய்விட்டாளோ? எப்படிப் போனுள்? எப்போது போனுள்? எதுவும் புரியாமல் திகைத்தான் அவன்!

மணி ஒன்றடித்தபோது, சரசு எங்கேயோ போய்விட்டாள் என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட மாணிக்கம் 'ஓ' என்று அழுதே விட்டான். எதற்கும் வெளியிலே போய்ப் பார்ப்போம் என்று கிளம்பினுன். எங்கே போய்ப் பார்ப்பது? இடம் தெரியாமல் வீடுகளை அடைத்துப் போட்டு வைத்திருக்கும் சென்னை நகரில் எந்தச் சந்து என்று தேடுவது? யாரிடம் போய் என்ன அடையாளம் கூறி விசாரிக்க முடியும்? எதுவும் முடியாதென்று தெரிந்தும் தெருக்களை நடந்தே கடந்து கொண்டிருந்தான் மாணிக்கம். கள்ள நோட்டு வழக்கில் கைது செய்யப்பட்டபோது கூட அவன் மனம் இவ்வளவு பேதலித்ததில்லை. சுற்றினுன் சுற்றினுன், சென்னை நகரம் முழுவதையும் சுற்றினுன். கால் கடுத்தது மிச்சமே தவிர சரசுவைக் காணவில்லை. முடிவில், நம்பிக்கை இழந்த மாணிக்கம், பைத்தியம் பிடித்தவன் போலவே ஆகிவிட்டான். இரவு எட்டு மணிக்கு மெரீனு கடற்கரை வந்தடைந்தான். சென்னை நகரத்துக்குப் பெருமை தரும் அந்த ஒரே ஒரு இடம் கூட, அவனுக்கு அமைதியைத் தரவில்லை. பாதசாரிகள் போவதற்கென்று அழகாக ஒதுக்கிக் கட்டப்பட்ட நடைபாதையின் ஓரச் சுவரில் அமர்ந்தான். தலை, பெரும் பாரமாகத் தோன்றிற்று. கைகளால் பிடித்துக் கொண்டான். சிறிது நேரத்தில் எழுந்து கடற்கரை மணலிலேயே போய்ப் படுத்துவிட்டான்.

இங்கே ரௌடிகளால் மடக்கப்பட்ட சரசு மாலையில்தான் கண் விழித்தாள். 'அத்தான்', 'அண்ணு' என்று கதறினுள். 'அண்ணு இல்லே! அத்தான் இருக்கிறேன்' என்று ஒரு குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள். அங்கே ஒரு அழகிய வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

தொடரும்

★
அழகிய முகப்புடன்
இரண்டாவது இதழ்
மார்கழி முதல் நாள்
எங்கும் கிடைக்கும்.
★

தயாரிப்பவர்கள் :
பெல் புகையிலை கம்பெனி
Pro: M. முஹமது ஷரீப் ராவுத்தர்
P. B. No. 11 : : புதுக்கோட்டை.

கண்ணதாசன்
எழுதும்
ஓருமணி நேர
நாடகங்கள்
— அடுத்த இதழில் —

நூல் நயம்

"உரிமை வாழ்வு"

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தென்னாட்டினுடைய கடந்த கால சுகவாழ்வு பற்றியும் இடைக்காலத்திலே ஏற்பட்ட நலிவு பற்றியும் எழுதிய நூல் இது. திராவிட நாடு தனி நாடாவதை எதிர்க்கிறவர்களை பல முனைகளில் சந்தித்து அடுக்கடுக்காகக் கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார் பேராசிரியர். மொழியும் அரசும்பற்றிக் கேட்கிறார். கறையான் புற்றெடுக்க கருநாகம் வாழ்வதா? என்று கண்டிக்கிறார், ஆதிக்கமொழி எது என வினவுகிறார், வடக்கையும் தெற்கையும் எடை போட்டுக் காட்டுகிறார், உரிமை வாழ்வு எது என்று நாங்கள் சொல்லுகிறோம், அதை மறுத்துப் பேசுபவர்கள் முன்வரலாம் என்று அறைகூவல் விடுக்கிறார்; இப்படி திராவிட முன்னேற்றக்கழகத்தை காரணமின்றி எதிர்த்து ஒளிந்து நின்று சொத்தை வாதத்தைத் தூவுகின்ற எதிர்க்கட்சிக்காரர்களின் கவனத்திற்கு ஏராளமான உண்மைகளை இந்நூலின் மூலம் பேராசிரியர் அன்பழகன் விளக்கியிருக்கிறார்.

இதில் 'புதுக் கணக்குப் போடுங்கள்' என்ற கட்டுரையில் வெள்ளையர்களை காங்கிரசார் எதிர்த்த சுதந்திரப் போராட்டத்தில் தென்னாடு வடித்த இரத்தத்தை அளந்து காட்டி, தியாக சீலர்களை வரிசைப்படுத்தி விருப்பு வெறுப்பின்றி பேராசிரியர் எழுதியிருப்பது ஆசிரியரின் பெருந்தன்மைக்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

"வடக்கே பகவத்சிங் எனில் தெற்கே திருப்பூர் குமரன், வடக்கே லோகமான்ய பாலகங்காதர திலகர் எனில், தெற்கே கப்பலோட்டி செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், வடக்கே லாலா லஜபதிராய், பபின் சந்திரபாலர் எனில் தெற்கே வ. வெ. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா; வடக்கே கவிஞர் தாகூர் எனில் தெற்கே தேசீயக்கவி பாரதி; வடக்கே சர்தார் படேல் எனில் தெற்கே சத்தியமூர்த்தி; வடக்கே ராஜேந்திர பிரசாத் எனில் தெற்கே ஓமாந்தூர் ராமசாமி; வடக்கே ஆச்சாரிய கிருபளானி எனில் தெற்கே டாக்டர் வரதராஜுலு; வடக்கே மோதிலால் எனில் தெற்கே சீனிவாச அய்யங்கார்; அங்கே போஸ் என்றால் இங்கே பெரியார் ராமசாமி; அங்கே நேரு, இங்கே ஆச்சாரியார்; அங்கே காந்தியார் இங்கே திரு. வி. க."—தேசீயப் போராட்டத்தின்போது வடவரே அதிகம் பங்கு பெற்றனர் என்னும் சூன்யங்களுக்கு பேராசிரியரின் இந்த எடுத்துக்காட்டு கசையடியாக அமைத்திருக்கிறது. அதே போது உன்னதமான தொண்டு செய்த தென்னாடு, இந்திய துணைக்கண்டத்தின் சுதந்திரவாழ்வில் ஏன் வடநாட்டைப் போல் சுகமாக வாழமுடியவில்லை என்ற ஐயப்பாட்டையும் உண்மையான காங்கிரஸ்காரர்களின் உள்ளங்களிலே விதைப்பதற்கும் உதவியாக இருக்கிறது. இதுபோல் பேராசிரியர் அவர்கள் இந்நூலில் அடங்கியிருக்கும் பத்துக் கட்டுரைகளிலும் தென்னாட்டின் அரசியல் நிலையை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். மாணவர்களும், தென்னாட்டுப் பிரச்னை பற்றிப் பேசுவோரை பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்கும் 'விசாலப் பார்வை'யினரும் இந்த நூலை அவசியம் படிக்க வேண்டும். ஆசிரியரின் படத்தோடு கூடிய அழகான முகப்பு, உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்ட இந்த நூலின் விலை ரூ. 1—8—0.

கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

அய்க்கண் - அமிர்தம்

சமீபத்தில், திருமலைராயன்பட்டணத்தில் ஓவியர் அய்க்கணுக்கும், திருமதி அமிர்தத்திற்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் நிதிக்காக சிறப்புக் கூட்டம்

16-12-56 ஞாயிறு காலை 10-மணிக்கு, வேலூர் நேசனல் தியேட்டரில் திரு. எம். பி. சாரதி எம் சி. அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா, என். வி. நடராசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் கலந்துகொள்ள கோருகிறோம்.

நன்கொடை: ரூ. 25, 10, 5, 3, 1, அணா 8.

★

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து வேண்டுகோள்

மதுரை மாவட்ட தி. மு. கழகத் தோழர்கள் பொதுச் செயலாளர் அறிக்கைப்படி 10-12-56 முதல் 16-12-56 வரை, தேர்தல் நிதி திரட்டும் வேலையில் ஈடுபட்டு, மதுரை மாவட்டம் மற்ற மாவட்டங்கட்கு வழிகாட்டும் வகையில் பெரும் தொகை திரட்டி அனுப்பிவைக்க வேண்டுகிறேன் என மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து கேட்டுக் கொள்கிறார்.

★

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் சிறப்புக் கூட்டங்கள்

15-12-56	காலை	திருச்சி.
	மாலை	மதுரை.
16-12-56	காலை	கோவில்பட்டி.
	மாலை	தூத்துக்குடி.
17-12-56	காலை	துறையூர்.
	மாலை	நாமக்கல்.

★

ஆசிரியர் கல்லூரி சைதாப்பேட்டை.

30-11-56 வெள்ளியன்று மாலை, ஆசிரியர் கல்லூரி, நுண்கலை மன்றத்தின் சார்பில், மாணவ நண்பர் திரு. வரதராசுலு, பி ஏ, வரவேற்பு வழங்க, தமிழ்த் துறைத் தலைவர் திரு. கோவிந்தராசன் எம். ஏ. எல். டி. தலைமை தாங்க, ஆசிரியர் கண்ணதாசன் "நுண்கலை" எனும் பொருள்பற்றிப் பேசினார். பின்னர், நுண்கலைக் குழுவினரால் "நச்சுக் கோப்பை" என்ற நாடகம் நடிக்கப் பெற்றது.

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம்

15—12—56 சனி மாலை 7-மணிக்கு

தமுக்கம் மைதானம்

திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

இசை முரசு:

நாகூர் அனிபா அவர்கள்,

நாட்டுப் பண்பாடுவார்.

புரட்சி நடிகர்:

எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்,

'நாடும் நடிகர்களும்' என்பது பற்றியும்

பொதுச் செயலாளர்: -

இரா. நெடுஞ்செழியன் அவர்கள்,

'வள்ளுவர் காட்டும் அரசியல் நெறி' என்பது பற்றியும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவர்.

அனைவரும் திரண்டு வருக!

நன்கொடை: ரூ. 1, அணா 8.

நகர் தி. மு. க., மதுரை.

குறிப்பு: செப்டம்பர் மாதம் 16உ திராவிட நாடு பிரிவினை நாள் விழாவைச் சிறப்பிக்க ஏற்பாடு செய்த மதுரை நகர் கிளைக் கழகங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

திருப்புத்தூர் வட்டத்தில் கண்ணதாசன் சுற்றுப் பிரயாணம்.

14-12-56உ கீழச்சிவல்பட்டி பொதுக்கூட்டம்.

15-12-56உ கண்டிரமாணிக்கம் பொதுக்கூட்டம். அன்று மாலை 3-மணிக்கு மனையப்பட்டி கொடியேற்று விழா.

16-12-56உ ச. ச. கோட்டை பொதுக்கூட்டம். அன்றுமாலை 3-மணிக்கு கோட்டையிருப்பு கொடியேற்று விழா.

17-12-56உ மு. சூரக்குடி பொதுக்கூட்டம்.

18-12-56உ சதுர்வேத மங்கலம் பொதுக்கூட்டம். பகல் 2-மணிக்கு திருக்களாப்பட்டியில் கோடியேற்று விழா. 3-மணிக்கு காளாப்பூரில் ஊழியர் கூட்டம் நடைபெறும்.

சுற்றுப்பிரயாணத்தில் தொகுதிக் குழுச்செயலாளர் பெரி. அழகும், துணைச் செயலாளர் மரிசெபத்தியும் கலந்து கொள்வார்கள்.

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு



எங்கும் கிடைக்கும்.

— 3-ம் பக்கம் தொடர்ச்சி —

வேண்டாம். பேசாமல் வந்து சேரவும். உடனே வரவும்.

தங்கள் அன்புள்ள,
பப்பா.

“அவரிட்டேருந்து மூணு மாசமா பதிலே இல்லே. கொழந்தை செத்துப் போச்சுண்ணு கூட பொய்யா லெட்டர் எழுதிப் போட்டேன். நான் என்ன செய்யிறது அண்ணே. ஒன்னெ எட்டி எட்டி மிதிச்சேன். நீ குடுக்கறதையே பொங்கித் திண்ணேன். இப்போ நீதான் எனக்கு கதின்னு ஆயிப்போச்சு.”

“அப்பிடியெல்லாம் சொல்லாதெ பப்பா. எப்பவும் ஒனக்கு என் மனசிலெ எடமுண்டு. நீ என்ன செய்தாலும் சரி”.

“அண்ணே எனக்குண்ணு உள்ளவன் எங்கியோ இருக்கான். செத்துப் போனதா தெரியலெ. அவன் கட்டின தாலி நெஞ்செ உறுத்தது. கொழந்தையும் இருக்கு இவ்வளவுக்கும் எடையிலே நீ...நீ”.

“வேண்டாம் பப்பா—வேண்டாம். உன்னெ நான் துரோகம் செய்ய நெனைக்கல்லெ.

★

“இன்னிக்கு சமைக்க அரிசி இருக்கா. காசு எவ்வளவு வேணும்?”

“எல்லாம் இருக்கு. நீங்க கடைக்குப் போங்க”.

“மாமா, வரச்சிலெ எனக்கு மிட்டாய் வாங்கியா மாமா?”

“சீ, மூதி, மாமாவா எத்தனெ தடவெ சொன்னேன்; அது மாமா இல்லெ. அப்பா’ண்ணு”.

“அப்போ நம்ம அப்பாவை எப்பிடி கூப்பிடுவதாம்?”

“அந்த அப்பா இனிமெ இல்லே”

“பொய் சொல்லுதே! அண்ணைக்கு காயிதம் கூட எழுதியிருந்தச்சே என்னக் கூடெ கேட்டிருந்துதுண்ணு சொன்னியே”

“சவமே சொன்ன மாதிரி கேளேன்”.

“ஊம். எனக்கு அந்த அப்பா தான் வேணும்! இது மாமாவா இருந்தா போதும்”.

“வாயை மூடிக்கிட்டு கெட! நீங்க போங்க”.

“மாமா...ஊம்...ஊம்”.

★

“அப்போ இவ்வளவு நாளா சும்மாதானே என்னெ ஆழம் பாத்துக்கிட்டிருந்தே?”

“ஆளமும் பாக்கல்லே, ஒண்ணும் பாக்கல்லே எப்பிடியும் எனக்கு தாலி கட்டியவன் இருக்கும்போது...”

“இப்போ அந்த பயம் இல்லியே?”

“பயமில்லாவிட்டாலும் எனக்கு மனசிலே எங்கியோ என்னமோ கொறை இருக்கிருப்பிலே ஒரு தோற்றம்”.

“சரி, சரி கொழந்தை முழிக்கிறதுக்குள்ளே இப்பிடி வா”.

“உங்களுக்கு எப்பவும் இது ஒரு பழக்கம். இப்பிடி வாய் நெறையப் பொகையிலே போடிறியளே. எனக்கு அசிங்கமா இருக்கு! சவம் இந்த பழக்கமெல்லாம் உங்களுக் கெதுக்கு?”

“இனிமே இல்லெ வா. நேரமும் ஆவுது”.

“உம்” இன்னும் எல்லாம் கொஞ்சம் பதனமாகத் தான் இருக்கணும்”.

“ஏன் அப்பிடி?”

“இன்னும் ஒரு மாசத்திலெ”.

‘ஓ அப்பிடியா, அப்படீன்னு இங்கெ வா, கடைசியா.”

“எத்தனெ கடைசி ஆயாச்சு?”

“வாயேன்.”

“ஐயையோ எனக்கு அசிங்கமா இருக்கு.”

★

“பப்பா. பப்பா”

“என்ன இண்ணைக்கு. கூப்பாடு பலமா இருக்கு. ஒரே ‘இதா’ வாறெகளே? என்ன விசேஷம்?”

“ஒனக்கு ஒரு லெட்டரு வந்திருக்கு, லெட்டரு.”

“எனக்கா? யாரு?”

“இந்தாயேன் நீ படிச்சுப் பாரு. நான் ஒடைக்கக் கூட இல்லே...இந்தா.

அன்புள்ள
பப்பா,

இந்த அஞ்சு மாசமா ஆஸ்பத்திரியிலே தான் இருந்தேன். உன் லெட்டர் எல்லாம் கெடச்சிது. அங்கேயிருக்கிற நெலமைக்கு. எனது நோக்காட்டையும் எழுத வேண்டாம்ணு நெனைச்சேன். பாதியும் மத இருக்கிருனே என்ற தைரியந்தான். உன் லட்டர்படி நாளையே இங்கேயிருந்து புறப்பட்றேன். மதுவிடமும் விபரத்தைச் சொல்லவும். மற்றவை நேரில்.

உனது அன்புள்ள,
ராசா.

—ஆ. மாதவன்.

ராம் ரேடியோ சர்வீஸ்
டீலர்ஸ் அண்ட் இஞ்சினீயர்ஸ்,
புதுக்கோட்டை

PHILIPS
பிலிப்ஸ்

- ரேடியோ
- ஒலிபெருக்கிக் கருவி
- இன்பிராபில் லாம்ப்
- பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்விஸ் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு
ராம் ரேடியோ சர்வீஸ்
தபால் பெட்டி நெம்பர் 2.
கீழராஜ வீதி : : புதுக்கோட்டை.

குமரன் லாரி புக்கிங் ஆபீஸ்
மேலராஜ வீதி : : புதுக்கோட்டை

★

எங்கள் ஆபீஸ் மூலமாக எல்லா ஊர்கட்கும்—நாணயமாகவும், நம்பிக்கையோடும் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கும்படி செய்கிறோம். ஒரு தடவை எங்களுடன் தொடர்பு கொண்டவர்கள் எங்களை விடவேமாட்டார்கள் என்பது உறுதி. கடிதம் மூலம் வரும் ஆடர்களைக் கவனித்து உடனுக்குடன் ஆவன செய்வோம் என்று உறுதி கூறுகிறோம்.

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி
சித்த வைத்தியசாலை.
56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனும்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,
தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

"எதற்கும் துணிந்த காதல்"

தலைவன், தலைவியை நேசிக்கிறான். ஆனால் அவளை அடைய முடியவில்லை. காரணம் தலைவியின் பெற்றோர்கள் எதிர்க்கிறார்கள். எதிர்ப்பைக் கண்டு தலைவன் அஞ்சவில்லை. அவனது உள்ளம் 'மடலேற' முடிவு செய்கிறது. அதைக் கண்ணுற்ற, தலைவியின் பெற்றோர்களின் மனம் இளகிவிடுகிறது. நந்திக் கலம்பகத்தில் உள்ள ஒரு பாடல் மேற்சொன்ன நிகழ்ச்சியைத் தெரிவிக்கிறது. அதை இங்கே விவரித்திருக்கிறார் தோழர் வேலை எஸ். எழில். (ஆ-ர்.)

இளைஞன் ஒருவன். சூடேறிய அவனது உணர்ச்சிகளில் காதலின் கனகனப்புத் தெரிகிறது. அவன் இதயத்தில் காதல் நோயின் 'வலி' மிருதுவாக ஊர்கிறது. நீண்ட நாட்களாக அவனுக்கும்-ஒரு அழகிக்கும் நெஞ்சக் கலப்பு இருந்து வருகிறது. அவள் 'அத்தான்' என்பாள். 'என்ன என் அன்பே' என்பான் அவன். அன்பு இதயங்களால் ஒருவரோடு ஒருவர் கலந்து போயினர். அவளழகு அவனழகுக்கு ஆலோலம் பாடிற்று. அவன் எழில் அவளழகுக்குப் புகழ் பாடியது. அழகும் அழகும், அன்பும் அன்பும் ஒன்றிக் கலந்தன அவர்கள் உருவில்.

காலம் ஒரே இடத்தில் நிலைத்துப் போகும் திடப்பொருள் அல்லவே. தன் பாட்டிற்குச் உலக சுழற்சியில் ஊடாடிக் கொண்டிருப்பது தானே காலம்! காலம் சுழன்று கொண்டிருந்தது. காதலர்களிடையே இடைவெளி ஏற்படலானது. ஆமாம், அவர்கள் இருவருக்கிடையே திரை விழுந்தது.

பெண்ணின் பெற்றோர், கட்டுப்பாடு என்ற சம்பிரதாயவிலங்கை எடுத்துத் தன் மகளுக்குப் பூட்டினர். வீடே சிறையாகிப் போனது அம்மங்கைக்கு. அதன் பலன்? அம்மடமாதைக் காணாமல் அவள் காதலன் நசிந்து வந்தான். 'என் அன்பை எப்போது காண்பேன்? அவளோடு, எப்பொழுது பேசி மகிழ்வேன்? வார்த்தைகளிலும் வண்டு விழிகளிலும் இன்பத்தைத் ததும்பச் செய்யும், என் அன்புக் காதலியோடு எப்போது கலந்துறவாடுவேன்?' என்றெல்லாம் அவன் அரற்றினான். அவனுடைய இதயத்தில் குமுறிய ஏக்கத்தை, சோகத்தை, துயரத்தை—ஊராரும் பெண்ணின் பெற்றோரும் எங்ஙனம் அறிவர்?

அவளைக் காணவேண்டுமென்ற ஆர்வத்தால், அவன் அவள் வீட்டுவழியே நடைபோடலானான். வீதியின் ஓரங்களில் நின்று ஒண்டொடியாளின் ஓரக்கண் பார்வைக்காகத் தவங்கிடக்கலானான். தன் எண்ணங்களின் சொற்படியெல்லாம் நடக்கலானான். தனக்குத் தெரிந்த தந்திர முறைகளையெல்லாம் பிரயோகித்தான். அவனின் எல்லா முயற்சிகளும் வீண்! வீண்!! அவளைக் காணவே அவனால் ஆகவில்லை, அவ்வளவு கடுமையாக அப்பெண்ணுக்குக் காவல் போடப்பட்டிருந்தது.

அவன் அவளை அடையும் வழிவகைகளையெல்லாம் எண்ணுவான். அப்போதெல்லாம் அவளின் அழகுருவம் அவனை அணைத்துக் கொள்ளும். அவளின் அழகு தோயும் முகம்! அவ்வதனத்திலே அங்கும் இங்குமாக வாள்வீச்சைப் போன்று சுழலும் விழிகள், அவன் நெஞ்சை யள்ளும். நந்திவர்மனின் தோள்களில் தவழும் தொண்டை மாலையில் உள்ள மலர்களின் சிவப்பை வம்புக்கிழுக்கும் அவளின் அதரங்கள். அந்த மது ததும்பும் அதரங்கள் அவன் இதயத்தைப் பரிசிக்கும்! அவளின் அழகு நெளிவுகள் ஒவ்வொன்றும் . அவன் காதலை வளர்த்தன. அவனுடைய காதல் இப்போது தீவிரம் அடைந்து வந்தது. எப்படியும் காதலியை அடைந்தே தீருவது என்ற முடிவை நடைமுறைக்குக் கொணர்ந்தான்.

உள்ளஉறுதியும், காதலில் குறையாத பற்றும், தன்னம்பிக்கையும் கொண்ட துணிவுள்ள வாலிபனால்தான்—அந்த இளைஞன் செய்த முடிவை ஏற்றுச் செயல்பட முடியும். அவ்வளவு கடினமானதுமட்டுமல்ல — கவலையைத் தருவதும்கூடத் தான்!

ஆமாம், அவன்—அந்த இளைஞன் கொண்ட தீர்க்கமான முடிவு — மடலேறுதல்! இப்பொழுது தெரிகிறதல்லவா அவ்விளைஞனின் செயல் எத்தகையது என்பது? தற்காலத்தில் இளைஞர்கள் தம் காதலியரை அடையப் பலவித வழிமுறைகளைக் கையாள்கிறார்கள். நாகரிகம் வளர்ந்து கலகலப்பதாகச் சொல்லப்படும் அமெரிக்காவில்; அதுபோன்ற மேலைநாடுகளில்—இளைஞர்கள் மேற்கொள்ளும் செயல்கள் கேட்கச் சுவை பயக்கும்.

அந்த வாலிபர்கள், தாங்கள் காதலிக்கும் கன்னியர்களின் பெயர்களை அச்சடித்து ஊரெங்கும் விளம்பரம் செய்கிறார்களாம். சினிமா சுவரொட்டிகளைப் போன்று அச்சடித்து ஊரெல்லாம் ஒட்டிவிடுகிறார்களாம். பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்களாம். வேடிக்கை, விசித்திரம் என்கிறீர்களா? என்னமோ சொல்லிக் கொள்ளுங்கள். இங்ஙனமெல்லாம் விளம்பரம் செய்வதால் பெண்ணின்வீட்டாருக்கு விஷயம்தெரிந்துவிடுகிறதாம். ஊரும், நாடும் 'அவனையும் அவளையும்' இணைத்துப் பேசி ஒன்றாக்கி விடுகிறதாம். அதனால்தான் இம்முறைகளைக் கையாள்கிறார்களாம். எல்லாம் காலவேகத்தின் தணியாத மாற்றங்கள்...!

காதலி, வீட்டில் கூண்டுப் பறவையாக்கப்பட்டாள். அவளை மீட்டு, துணைப்பறவையாக்கிக் கொள்வது காதலனின் பொறுப்புத்தானே! அவன், காதலியை மீட்டு, கரம் பற்றுவது, தன் கடமையெனத் துணிந்தான். அவன் நெஞ்சில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் சுற்றிச் சுழன்றன. 'காதலியை அடைவது எப்படி?' தன் இதயத்தை அவன் பல முறை கேட்டான். "ஏ, இதயமே? நீ உறுதியின் நிலைக்களன் தானா? காதலின் உறைவிடம் தானா? உயிரே போவதானாலும் இன்னுயிர்க் காதலியை அடையத் துணிவாயா? உதிரம் உடலிலிருந்து ஊற்றெனப் பெருகுமே-அதை நீ தாங்கிக் கொள்வாயா? ஊரும் உலகமும் ஏசும்! எதற்கும் சம்மதம்தானே?" என்று தனக்குத் தானே உறுதியெடுத்துக்கொண்டான். அதன் பிறகே மடலேறுதல் என்ற மேற்கண்ட முடிவை ஏற்றுக்கொண்டான்.

பனை ஓலைகளின் கருக்கு மட்டைகளைக் கைகளில் எடுத்தான். அரம்போன்ற மட்டைகளின் கருக்குகளால் உடல் முழுதும் கீறிக்கொண்டான். உதிரம் உடலெல்லாம் ஊற்றெனப் பெருக்கெடுத்தது. உதிர ஒழுக்கலோடு தெருக்களைக் கடந்தான். காதலியின் வீடடைந்தான். அவளின் பெற்றோர்க்கு முன் சென்றான்—நின்றான்.

அவன் நிலை கண்டோர் கலங்கினர். அப்பெண்ணின் பெற்றோர் அவன் செயல் கண்டு துணுக்குற்றனர். செயல் மறந்தனர்! நிலைகுலைந்தனர்! அதே சமயம், 'அவன் மனம் குலையாமல் அத்தனை வேதனையையும் தாங்கிக் கொண்டிருக்கிறானே' என்ற எண்ணம் அவர்களை வேதனைப்படுத்தியது.

இளைஞனை அழைத்தனர். உதிரம் கொட்டும் உடலைக் குணப்படுத்தினர். அவன் நெஞ்சில் மகிழ்ச்சி பிறக்கச் செய்தனர்— 'எங்கள் பெண்ணை நீயே திருமணம் செய்து கொள்ளவேண்டும்' என்று வேண்டினர். அவன் ஊமையைப் போன்று தலையசைத்தான். ஆனாலும் அப்பொழுது அவன் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது.

அதுபோது, அப்பெண் கண்களில் நீர்கொட்ட அழுது வந்தாள். அவள் நிலை கண்டு பெற்றோர் திகைத்தனர். ஏன், அவள் காதலனும் கூடத்தான் திணறினான். 'காதலனைப் பெற்றுவிட்ட இவள் ஏன் இப்பொழுது அழுகிறாள்?' என்று எல்லோரும் வியந்தனர்.

"ஏனம்மா அழுகிறாய்? உன் அத்தான்தான் உன்னுடையவராகிவிட்டாரே! இன்னும் ஏன் அழுகை?" என்றாள் அவள் அன்னை.

"அம்மா! இந்த யோசனை முன்பே யிருந்திருந்தால், அவர் உடம்பு இப்படி ரணமாகியிராதே!", என்று தேம்பித் தேம்பி அழுதாள் அவள்.

எல்லோரும் அவள் அழுகையின் காரணம்தெரிந்தனர். "அட அசடே! இதற்கா அழுகிறாய்?" என்றார் அவள் தந்தை.

காதலனும் காதலியும் காதல் வெற்றியில் திளைத்தனர்.

"ஆள்க்குலாம் கடற்படை
அவனி நாரணன்
தோள்க்குலாம் மதுமலர்த்
தொண்டை வாய்ச்சியர்
வாள்க்குலாம் கண்ணினால்
விளைத்த மம்மர்நோய்
மீட்கலாம் மடல்கையில்
விரவும் ஆகிலே"

இப்பாடல் நந்திக் கலம்பகத்தில் உள்ளது.

அம்மங்கை விளைத்த காதல் நோய் தீர ஒரே வழி! காதலியைத் தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ள உள்ள முடிவான செயல்? கையில் பனையின் கருக்கு மட்டையை எடுப்பது தான்! காதலன் அம்முடிவை மேற்கொள்கிறான்: காதலர்களின் திண்மையையும் வன்மையையும் அழகோடு எடுத்துக் காட்டுகிறது கலம்பகம். ★

போன் No- 226.

ஷேக் ஷூ மார்ட்,

பழனி.

கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மிகச் சிறந்த மிதியடிகளும், ஷூஸ்களும், கவர்ச்சியூட்டும் டிசைன்களில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

பிளக்ஸ் & பாட்டா ஏஜண்ட்
உரிமையாளர்

உலகம் பலவிதம்

தேசிய விஸ்தரிப்புத் திட்டம்

தேசிய விஸ்தரிப்புத் திட்டம் என்ற பெயரில் அரசாங்கம் பலபல காரியங்களைச் சாதித்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் பல அரிய 'சாதனைகளைச் செய்துவிட்டதாகத் தம்பட்டம் அடிக்கிறது! முக்கியமான நகரங்களில், பஸ் ஸ்டாண்டுக்கருகிலோ அல்லது, பார்வையான இடங்களிலோ, சுவரில் சில 'சாதனை'களைச் செய்துவிட்டதாக அரசாங்கம் எழுதிவைத்திருக்கிறது. உண்மையிலேயே அந்தச் சாதனைகள் நடைபெற்றனவா என்பது வேறு விஷயம்! ஆனால் அந்த 'விளம்பரம்' எதற்காக என்பது தான் புரியவில்லை. அந்தந்த நகரத்து மக்களுக்கு அந்தந்த ஊரிலே நடைபெறுகிற சாதனைகள் தெரியாமலா இருக்கும்? தெரிந்திருக்கும்போது அதைச் சுவரிலே எழுதிவைக்க வேண்டிய அவசியம் என்ன வந்ததோ தெரியவில்லை. வேண்டுமானால், அரசாங்கத்தின் செலவு 'இந்த வகையிலும்' நீளநேருமே ஒழிய வேறு பயன் எதுவுமில்லை. இந்தத் திருத்தொண்டைத்தான் அரசாங்கம் செய்துவருகிறது! அதைத் தவிர வேறு சாதனைகள் இல்லை!

ஒருவேளை, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் கண்களிலே அந்தச் சாதனைகள் படவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளரின் அபார மூளையிலே பட்டதோ என்றால் அதுவும் பொருந்தவில்லை. வெளிநாட்டிலே இருந்து வருகின்றவர்கள் தமிழ்மொழியை அறிந்திருக்க நியாயமில்லை! அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமானால் 'சுவரொட்டிகள்' ஆங்கிலத்திலல்லவா இருக்கவேண்டும்! அதுவும் இல்லை? இதை எண்ணும்போது அரசியலாரின் ஏமாற்று வேலை நமக்கு எளிதாகப் புலனாகிறது. சொந்த நாட்டு மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற மனோபாவத்திலேயே இந்த வேலையைக் காங்கிரஸ் சர்க்கார் செய்கிறது. உண்மையிலேயே மக்களை ஏமாற்றுவது அவர்களது மனோபாவமாக இருந்தால், பரிதாபப்படுகிறோம்! அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள் என்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறோம்.

★

இந்தியப் பிரதமர் நேரு எப்போது பார்த்தாலும் வெளிநாட்டுக்குப் பயணம் செய்துகொண்டே இருக்கிறார். பிரயாணத்தை அவர் கலையாக எண்ணிவிட்டாரோ என்னவோ நாமறியோம். மத்திய சர்க்காரிலே ஒரு மந்திரி இருக்கிறார். அவருக்கு இலாகாவே கிடையாது. அவர் நேருவுக்குத் தபால்காரராக இருக்கிறார். அவர் தான் சதா பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார் என்று பார்த்தால், பிரதமரும் அதையே கைக்கொள்ளுகிறார். அவரது வெளிநாட்டுப் பிரயாணங்களினால் நாட்டுக்கோ, நமக்கோ எந்தவித நன்மையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சர்க்காரின் பொக்கிஷம் குறைவதைத்தான் நமது கண்ணாலே பார்க்கிறோம்.

சமீபத்தில்தான் பிரதமர் நேரு லண்டன் சென்றிருந்தார். அந்த நேரத்திலே சென்னை மாநிலத்து என். ஜி. ஓக்களில் முக்கியமானவர்கள் அவரைப் பேட்டி காணச் சென்று அவமானப்பட்டனர். "தான் வெளிநாடு போவதால் தற்போது இந்தப் பிரச்சினையைக் கவனிக்கமுடியாது" என்று, பொறுப்பற்ற முறையிலே அன்று சொன்னார். அந்த நிகழ்ச்சி நம் கவனத்தைவிட்டு இன்னும் மறையவில்லை. அதற்குள் அமெரிக்க நகரம் நோக்கிப் புறப்படுகிறார்.

பண்டிதர் நேரு ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவுக்கு முதல் முறையாகச் சென்ற சமயத்தில் இந்தியா முழுவதும் அது பற்றிய பேச்சுத்தான் இருந்தது. அப்போது அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ட்ருமன் நேரு பண்டிதருக்குத் தனி விமானம் அனுப்பினாராம். இதைச் சொல்லிச் சொல்லி 'தேசியங்கள்' பெருமைப் பட்டுக்கொண்டன. இப்போதும், அதேபோல் நேருவுக்குத் தனி விமானம் அனுப்புகிறாராம் அமெரிக்க ஜனாதிபதி. இந்தத் தனி விமானமும், அடிக்கடி பிரயாணமும், இந்தியத் துணைக்கண்டத்துக்கோ, தமிழ்நாட்டுக்கோ எந்த வித நன்மையையும் தரவில்லை. அமெரிக்கர்கள் அடிக்கடி நேருவுக்குத் தனி விமானம் அனுப்புவதைக் கண்டு தேசியங்கள் பெருமைப் பட்டுக்கொள்ளத் தேவையில்லை. இது அமெரிக்காவின் தந்திரம். ஷியாங்கே ஷேக் தம்பதிகளுக்குக் கூட அமெரிக்கா தனிவிமானம் தான் அனுப்பியது. 'தேசியங்'கள் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

—தமிழ்ப்பித்தன்.

ஒப்புயர்வு கோண்ட நாவல்

கிடைக்குமிடம்:

மலர் நிலையம்

133, பிராட்வே, சென்னை-1.

1957

தென்றல் பொங்கல் மலர்

எல்லாப் பக்கங்களும்
அழகிய பேப்பரில் அச்சிடப்படுகின்றன.

- ★ ஓவியர்கள் இராசன், அய்க்கண், நாத், மற்றும் திரை உலக ஆர்ட் டைரக்டர்கள் ஓவியம் வரைகிறார்கள்.
- ★ புதுக்கோட்டை அழகப்பா ஸ்டுடியோவினர் தென்றல் மலருக்கென்றே அற்புதமான வர்ணப் புகைப்படங்கள் தயாரிக்கிறார்கள்.
- ★ கவிஞர் சுரதா எழுதும் 'அந்தாதி பாடவைத்த அழகி' எனும் காவியம் அப்படியே கண்ணாடி போட்டுவைக்க வேண்டிய ஒன்று.
- ★ கவிஞர்கள் முடியரசன், வாணிதாசன், பேரி. சிவனடியான் முதலியோரது கவிதைகள்
- ★ பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்ரின் அற்புதமான ஆராய்ச்சிக் கட்டுரை.
- ★ முகப்புப் படம் ஆர்ட் அட்டையில்— மூவர்ணங்களில்.
- ★ கண்ணதாசனும் எழுதுகிறார்.

விலை

ரூ. 1-8-0

குறிப்பு: ஏஜண்டுத் தோழர்கள் 25 சதவீதம் கழிவு கழித்து **28-12-56க்குள்** முன்பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளவும். **அதற்குப்பின் வரும் ஆர்டர்கள் கவனிக்கப் படமாட்டா.** தனி மலர் வேண்டுவோர் பதிவுத்தபால் கட்டணம் சேர்த்து ரூ. 2-0-0 அனுப்பவும்.

—யாருக்கும் முன்பணம் இன்றி மலர் அனுப்பப்பட மாட்டாது.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்ந